# புற்றளை மகா வித்தியாலயம்,
# புலோலி

கல்வி அழகே அழகு • LEARNING IS BEAUTY TRUE • J/PUTTALAI MAHA VIDYALIYAM • யா/புற்றளை மகா வித்தியாலயம்

## பவள விழா * 1916 - 1991

# புற்றளை மகா வித்தியாலயம், புலோலி

பவள விழா ✶ 1916 - 1991

## இப்பவள விழா மலர்

★ அறிவுத் தெய்வத்துக்கும்,

★ அதனை ஆராதிக்கும் அனைத்துக்
கல்வி மாந்தர்க்கும்

*எமது அன்புச் சமர்ப்பணம்!*

# யா/புற்றளை மகா வித்தியாலயம்
# பவள விழா மலர் 1916-1991

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| சமர்ப்பணம் | | |
| கல்லூரிக் கீதம் | | |
| ஆசியுரைகள் | — பிரதமகுரு சோ. விஜயரத்தினக்குருக்கள் ... | 1 |
| | — அருட்திரு. R. M. G. நேசநாயகம் அடிகளார். | 2 |
| | — வண. E. J. அரசரத்தினம். .. ... ... | 3 |
| | — திரு. ஆர். சுந்தரலிங்கம். ... ... ... (பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்.) | 4 |
| | — பேராசிரியர். அ. துரைராசா. ... ... (துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்) | 5 |
| | — திரு. சி. சிவபாதம். ... ... ... (சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்) | 6 |
| | — பேராசிரியர். நா. பாலகிருஷ்ணன். ... ... (வணிகவியல், முகாமைத்துவத் துறைத் தலைவர் யாழ் பல்கலைக்கழகம்) | 7 |
| | — பேராசிரியர். வ. ஆறுமுகம். ... ... (தலைவர், கல்வியியற்புலம், யாழ் பல்கலைக்கழகம்) | 8 |
| | — பேராசிரியர். வி. கே. கணேசலிங்கம். ... ... (தலைவர், விலங்கியற்துறை, யாழ் பல்கலைக்கழகம்.) | 9 |
| அதிபர் அறிக்கை. | ... ... ... | 11 |
| உறவுகள். | — திரு. செ. செல்லத்துரை. ... ... ... | 21 |
| நினைவலைகள் | — திரு. சே. ஏகாம்பரநாதன். ... .. ... | 23 |
| யா/புற்றளை ம. வி. வரலாற்றில் ஒரு பின்னோக்கு — திரு. சி. தருமலிங்கம். | | 24 |
| நெஞ்சில் நிற்கும் நினைவுகள் சில — திரு. வே. தம்பிஐயா. ... ... | | 27 |
| பற்பல ஆண்டுகள் முன்னர் — திரு. வ. நாகலிங்கம் ... ... | | 28 |
| பவள விழாக் காணும் புற்றளை ம. வி. — திரு. த. கதிர்காமநாதன் ... | | 29 |
| பவள விழாவும் நாமும் — திரு. வ. செல்வராஜன். ... ... | | 30 |
| வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தில் எமது பாடசாலையின் பங்கும் பணியும் திரு. க. சதாசிவம் | | 31 |
| எங்கள் கல்வித் தாய் — பண்டிதர். வீ. பரந்தாமன். ... ... | | 33 |
| வாழ்க வென வாழ்த்திடுவோம்! — திரு. வே. ஆறுமுகம். ... ... | | 35 |
| பவள விழாக் காணும் புற்றளை ம. வி. — திரு. ஆ. விநாயகமூர்த்தி. ... | | 37 |
| நேர்த்திக் கடன்கள் — திரு. க. தம்பையா. ... ... ... | | 40 |
| அறிவைத்தேடி — திரு. வ. கு. கணபதிப்பிள்ளை. ... ... | | 47 |
| பாடசாலைக்காக வாழ்ந்த அதிபர்கள் வரிசை. ... ... ... | | 50 |
| ஆசிரியர் பட்டியல். ... ... ... | | 52 |
| பாடசாலை அபிவிருத்தி சங்க செயற்குழு. ... ... ... | | 54 |
| பழைய மாணவர் சங்க செயற்குழு. ... ... ... | | 55 |
| நன்றியுரை. ... ... ... ... ... | | 56 |

# பாடசாலைக் கீதம்

ராகம்: பிலஹரி தாளம்: ஆதி

பல்லவி

புற்றளை மகா வித்தியாலயம்
புகழுடன் வாழிய வாழியவே
(புற்றளை)

அனுபல்லவி

புலவரதொலியாறாப் புலோலியம்பதியில்
பொலிவு பெற்றெழிலுடன் ஓங்குகவே
(புற்றளை)

சரணம்

எண்ணும் எழுத்தும் முதலாகவுள்ள
இவ்வுலகேத்திடும் கலையெலாமோங்க
முந்தை வேத முதலெழுத்தாகும்
எந்தை திருவருள் என்றென்றும் நிற்க
(புற்றளை)

ஆண்மை வீரமும் அறிவுடன் கற்பும்
ஆமிவை நாலும் அணியுடன் தேங்க
மாணவர் மனதில் ஞான சூரியன்
மாண்புடன் துலங்க அகவிருளகல
(புற்றளை)

ஆடல் பாடல் ஆங்கிலம் செந்தமிழ்
ஆண்டவன் பெயரில் அளவிலா அன்பு
காண்பதற் கெளிமை யாவையுங் கலந்து
கற்பவை கற்றுக் கற்றாங்கொழுக
(புற்றளை)

உ
சிவமயம்

தென் புலோலி அருள்மிகு புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சோ. விஜயரத்தினக்குருக்கள்

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

புலோலிப் பெருமக்களால் சாரதா பீடமென ஆரம்பிக்கப்பட்டயாழ். புற்றளை மகாவித்தியாலயம் அண்மைக்காலத்தில் வேகமான வளர்ச்சியடைந்ததை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. புற்றளைச் சித்தி விநாயகரின் குபேரதிசைப் பார்வையில் கோயிலுக்கு மிக அணித்தாக அமைந்துள்ளமையும் தெய்வச் சூழலில் அமைந்துள்ளமையும் வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலக்கரையில் அமைந்துள்ளமையும் இக்கல்லூரிக்கு ஒரு ஈடு இணையற்ற தனிச்சிறப்பாகும். பக்தியை வளர்ப்பது தேவாலயம்; கல்வியை வளர்ப்பது வித்தியாலயம், அவ்வழி நிற்பது புற்றளை மகா வித்தியாலயம். பல அறிஞர்களையும், மேதைகளையும், புலவர்களையும் தன்னகத்தே தோற்றுவித்த பூரிப்போடு இன்று பொலிவுடனும், எழிலுடனும் கம்பீரமாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கும் இப்பாடசாலையின் பவள விழாவை இக்கல்லூரியின் தற்போதைய அதிபரும், ஆசிரிய, ஆசிரியைகளும், மாணவர்களும், இளைஞர்களும், பெற்றோர்களும் சேர்ந்து மிகச் சிறப்பாக கொண்டாடுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இக்கல்விக்கூடம் இன்று போல் என்றும் தன் கல்விப்பணியைத் தொடர புற்றளைச் சித்திவிநாயகப் பெருமானை வந்திப்பதுடன், என் மனம் நிறைந்த நல்லாசிகளையும் வழங்கி அமைகிறேன்.

வணக்கம்

இங்ஙனம்
பிரதமகுரு
சோ. விஜயரத்தினக்குருக்கள்

# பங்குத் தந்தையின் ஆசியுரை

பரு/புற்றளை மகா வித்தியாலயத்தின் "பவள விழா"வின் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஓர் கல்விச்சாலை தனது வாழ்விலே "பவள விழாவை"க் காண்பதாயின் அக் கல்விச்சாலையின் வளர்ச்சியில் நாம் மகிழ்ச்சியடைவதோடு, அதன் வளர்ச்சியை உள்நோக்கிப் பார்ப்பதும் எமது கடமையாகும்.

இக்கல்விச்சாலையை உள்நோக்குமிடத்து இதனுடைய வளர்ச்சி எமக்கு அதிர்ச்சியைக் கொடுக்காவிட்டாலும், சிறிது, சிறிதாக வளர்ந்து "பவள விழா" வைக் காண்கிறது என்றால், எமது ஆசிக்கும், வாழ்த்துக்கும் உரியதாகின்றது.

நான் இக் கல்விச்சாலையின் வளவிற்குள் காலடி எடுத்துவைக்காவிட்டாலும், மாணவர்களோடும், ஆசிரியர்களோடும் உரையாடி அதன் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவனாயிருக்கின்றேன்.

இக் கல்விச்சாலையின் வளர்ச்சிக்கு வித்திட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் நிச்சயமாகப் புகழப்படவேண்டியவர்கள். அதுமட்டுமன்றி இதன் வளர்ச்சியில் ஒத்துழைப்பு வழங்கிய, பெற்றோர் பழைய மாணவர்களையும் நாம் மறந்து விட முடியாது. எனவே வளர்ந்து நின்று வாழ்த்துப்பெறும் இக் கல்விச்சாலை மேலும் மேலும் வளர இறை ஆசியை வேண்டி என்னால் இயன்ற உதவிகளை வழங்குவேன் என்று கூறி நிற்கின்றேன்.

வளர்க புற்றளை மகா வித்தியாலயம்

வாழ்க தமிழ்.

R. M. G. நேசநாயகம்
பங்குத்தந்தை

கத்தோலிக்க ஆலயம்,
பருத்தித்துறை.

பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபைக் குருவானவரின்

# ஆசிச் செய்தி

புற்றளை மகாவித்தியாலயம் தனது பவள விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை — கட்டைவேலி சேகரத்தினது சார்பிலும், எனது சார்பிலும் வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

திருடனால் திருடமுடியாதது, வெள்ளத்தால் வாரிக்கொள்ளப்படாதது, வெந்தழலில் வேகாதது கல்விச் செல்வம் என்பார்கள். காலத்தினால் அழிக்கப்படாத கல்விச் செல்வத்தின் பொக்கிஷங்களாகக் கல்விக்கூடங்கள் சிறந்து விளங்குகின்றன. அவ்வரிசையில் புற்றளை மகாவித்தியாலயமும் சிறப்புடன் விளங்குவது மகிழ்வுக்குரியது சமூகத்தில் பலதரப்பட்டவர்கள் பண்பட்டவர்களாக விளங்க இப்பாடசாலை ஊன்றுகோலாய் விளங்கியது என ஐயந்திரிபறக் கூறலாம்.

மன்னர்க்குத் தன்தேசமல்லால் சிறப்பில்லை, கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பார்கள். அத்தகைய சிறப்பினை மாணிடர்க்கு வழங்கும் இப்பாடசாலை தொடர்ந்தும் சிறப்புறத் தன் பணியைச் செய்ய இறை ஆசி வேண்டி வாழ்த்துகிறேன்.

“ கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் ” எனத் திருமறை கூறுவதற்கிணங்க இறைவனை எப்போதும் நினைந்து அவர் வழி நடத்துதலில் தொடர்ந்து வளர — உயர எனது வாழ்த்துக்கள்.

வண C. J. அரசரத்தினம்

குருமனை
அல்வாய்

பிராந்தியக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி

புலமையும் பண்பும் மிக்க புலோலியின் கண் புற்றளையிலே தெருவோரத் தரு ஒன்றின் கீழ் திண்ணைப் பள்ளியாக அரும்பி மகாவித்தியாலயமாக இன்று மலர்ந்து கல்விக் கலை மணம் பரப்பும் புற்றளை மகா வித்தியாலயத்தின் வளர்ச்சி பெருமையுடையது. 'சிறந்த கல்வி பட்டணங்களிலே நடைபெறுகிறது' என்னும் மனப்பாங்கினை மாற்றி சிற்றூர்களிலும் கல்வி சிறக்கச் சேவையாற்றும் சிறிய கல்விக் கூடங்களில் ஒன்றாக புற்றளை மகா வித்தியாலயம் திகழ்வது மகிழ்ச்சியைத் தருகின்றது.

இப்பாடசாலை தனது பவள விழாவைக் கொண்டாடும் இவ்வேளையிலே அதன் பழைய மாணவர்கள் இருவர் வடமராட்சிக் கல்விக் கோட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமை புரிகின்றமை பாடசாலையின் கல்வி வரலாற்றில் இடம் பெறும் சாலச் சிறந்த சம்பவப் பொருந்துகையாகும்.

வருங்காலத்திலே தாயகத்தின் தலைசிறந்த கல்விச்சாலைகளில் ஒன்றாக இப்பாடசாலை தழைத்தோங்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

இ. சுந்தரலிங்கம்
யாழ்ப்பாணம் — கல்விப் பணிப்பாளர்

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்
**பேராசிரியர் திரு. அ. துரைராசா**
அவர்களின்

# ஆசிச் செய்தி

**1916 ஆம்** ஆண்டு தொடங்கிய புற்றளை மகாவித்தியாலயம் சிறப்பாக வளர்ந்து 75 ஆண்டு நிறைவு பெற்று இன்று பவள விழாக் கொண்டாடுகிறது. இருபாலாரும் பயிலும் இக்கல்லூரியில் 700 மாணவர்கள் கல்வி பயிலுகிறார்கள். க. பொ. த. உயர்தர வகுப்புக்கள் கலைப் பாடங்களில் நடைபெறுகின்றன.

புலோலியிலுள்ள பல கிராமத்து மாணவர்களுக்குக் கல்வி பெறும் வசதியை இக்கல்லூரி செவ்வனே அளித்து வந்திருக்கிறது. இக்கல்லூரியில் பழைய மாணவர் பலர் பல துறைகளிற் பாண்டித்தியம் பெற்று அரசாங்க சேவையிலும் தனியார் நிறுவனங்களிலும் உயர் பதவிகளை வகித்து வருகின்றனர்.

கடந்த சில வருடங்களாக, தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி, வேலைவாய்ப்பு உடல் உளநிலை முதலியவற்றிலே தாக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பல கல்லூரிகளும், நூல் நிலையங்களும் அழிக்கப்பட்டுள்ளன. மக்கள் பலர் இடம் பெயர்ந்து அகதிகளானதால் அவர்களின் பிள்ளைகளின் கல்வி பாதிப்படைந்துள்ளது. மின்சாரம் இல்லை, உணவுப் பொருள்கள், மருந்துகள், மண்ணெண்ணெய் முதலியவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. குண்டு வீச்சு, எறிகணை வீச்சு இடைக்கிடை நடைபெறுகின்றன. இவை எமது பிள்ளைகளுக்கு உடல், ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. அதன் விளைவாகக் கல்வியும் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

கல்வியினூடாகத்தான் எமது மனித வளங்களை அபிவிருத்தி செய்யலாம். அவ்வாறு செய்தால், எமது பொருளாதார முன்னேற்றத்துக்கு வேண்டிய பங்களிப்பை எம் பிள்ளைகளால் அளிக்க முடியும். எனவே தற்போதைய சூழ்நிலையிலும் பல கஷ்டங்கள் மத்தியிலும் எமது கல்லூரிகள் தொடர்ந்தும் பிள்ளைகளுக்குக் கல்வியைப் புகட்டி வரவேண்டியது அவசியமாகிறது. இதில் எமது ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானது. அவர்கள் சேவை மனப்பான்மையுடன், அர்ப்பணிப்பு உணர்வோடு, பிள்ளைகளின் கல்வியை அழிக்க முயலும் சக்திகளை எதிர்த்துக் கடமையாற்றல் வேண்டும்.

இந்த மனப்பான்மையுடன் புற்றளை மகாவித்தியாலய ஆசிரியர்கள் கடமையாற்றி வருவதை மெச்சுதல் வேண்டும். இவர்களின் கடமையுணர்வுள்ள பணி தொடர்ந்து அக்கல்லூரிப் பிள்ளைகளுக்குக் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தித்து புற்றளை மகாவித்தியாலயம் தொடர்ந்தும் தேசப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று உள்ள திறமையான மாணவர்களை எமது பிரதேசத்துக்கு அளிக்க வேண்டுமென இறைவனை வேண்டிக்கொள்கிறேன். பவளவிழாக் கொண்டாட்டம் சிறப்புற நடைபெற எனது வாழ்த்துக்கள்.

அ. துரைராசா
பேராசிரியர்
துணைவேந்தர்,

யாழ். பல்கலைக்கழகம்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. சி. சிவபாதம்
அவர்களின்

# ஆசிச் செய்தி

எனது நண்பர் அதிபர் ஏ. ஜொசுவா அவர்களின் வேண்டுகோளிற் கிணங்கி இவ் ஆசிச் செய்தியை பெரும் மகிழ்ச்சியோடும், உரிமையோடும் அளிக்கின்றேன்.

பவள விழாவைக் கொண்டாடும் புற்றளை மகாவித்தியாலயம் பல, பல ஆண்டுகள் வளர்ச்சியடைந்து கல்விப்பணியையும், வித்தியாதானத்தையும் வரும் சந்ததியினருக்கு வழங்கவேண்டும் என முதற்கண் புற்றளை மாமரத்தடி விநாயகனை வேண்டுவன் யான்.

54 வருடங்களுக்கு முன் நானறிந்த வராத்துப்பளை சாரதா பீட வித்தியாலயம் இன்று புற்றளை மகா வித்தியாலயமாய் வளர்ந்து உயர்ந்து நிமிர்ந்து வீறுநடை போடுகிறது.

''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்''

எமக்கு அகரமுதல் எழுத்துக்களை மரத்தடியிலிருந்து மணலில் எழுத வைத்து எம்மை வாழ்க்கையில் முன்னேறுவதற்காக வழிகாட்டிய ஆசான் வல்லிபுர உபாத்தியாரை என்றும் மறக்கமுடியாது. அக்காலத்தில் தலைமை உபாத்தியாயராக இருந்த சிபப்பிரகாச உபாத்தியாயர், கார்த்திகேசு உபாத்தியாயர் பிற்கால அதிபரான சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயர்களையும் முத்துக்குமாரு, வேலுப்பிள்ளை, சின்னத்துரை உபாத்தியாயரையும் ஆங்கில எழுத்துவரியை உணர்த்திய வைரமுத்து உபாத்தியாயரையும் என்றும் வணங்குவேன்.

எமக்கு சமய அறிவு நல்லொழுக்க விதிகளைப் புகட்டி, சைவ வினாவிடை நல்வழி, நன்னெறி, கொன்றைவேந்தன் போன்ற நீதிநூல்களை மனப்பாடமாக்கச் செய்து இன்றும் எம்மனதில் நீங்கா வண்ணம், கரடுமுரடான பாதையில் வழிகாட்டிய அப்பேராசான்களுக்கு எனது வணக்கங்கள்.

இன்றும் இவ்வித்தியாலயத்திலுள்ள கல்வி முறை சிறந்ததென்பது யாராலும் மறுக்க முடியாது. அயற்கிராமங்களிலுள்ள சிறார்கள் சிரேஷ்ட வகுப்புகளில் விஞ்ஞானம் மற்றும் பாடங்களைக் கற்பதற்காக வேறு கலாசாலை உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி பெறுவதற்குப் புற்றளை மகா வித்தியாலயம் தயார் செய்து கொடுக்கிறது.

எத்தனையோ கல்விமான்கள் அறிஞர்கள் தமது ஆரம்பக் கல்வியை புற்றளையிலேயே தொடங்கியுள்ளனர். ''பள்ளிக்கூட சிநேகிதம் பாதிரியார் வீட்டுப் படலை மட்டும் தான்''

''மனேஜர் சுப்பப்பா'' தான் ஆரம்ப காலத்திலிருந்து தமது வயது முதிர்ந்த நிலையிலும் இக் கலைக்கூடத்தின் வளர்ச்சிக்கு வழி வகுத்தவர் என்பதை எவரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

எனது அன்பார்ந்த ஆசிகள்

சி. சிவபாதம்
(1938-1939ஆம் ஆண்டுகளில்
சின்னமுதல் பெரியமுதல் ஆண்டு மாணவன்)

## பேராசிரியர் திரு. நா. பாலகிருஷ்ணன்

அவர்களின்

# ஆசிச் செய்தி

வடமராட்சிப் பகுதி கல்வி வளர்ச்சியில் பல்லாண்டு காலமாக முன்னிலையில் இருந்து வந்துள்ளது. அப்பகுதி மக்கள் கல்வியில் காட்டும் ஆர்வமும், மாணவர்களை நன்கு வழிநடாத்தும் கல்வி நிறுவனங்களும் இதற்கு வழி வகுத்துள்ளன.

புலோலியில் உள்ள புற்றளை மகாவித்தியாலயமும் பல ஆண்டுகளாக கல்விப் பாரம்பரியத்தினை வளர்ப்பதில் பங்களிப்புச் செய்துள்ளது. ஒரு சிறிய கிராமப் பாடசாலையாக ஆரம்பித்து, இந்நிறுவனம் இன்று மகா வித்தியாலயம் என்ற அந்தஸ்தினைப் பெற்றுப் பணிபுரிந்து வருகின்றது. எழுபத்தைந்து வருடங்களை இன்று பூர்த்தி செய்த இக்கல்வி நிறுவனத்தையும், அதனுடைய சேவையையும், அதற்காக உழைத்த ஆசிரியர்களையும் உள்ளூர் மக்களையும், மாணவர்களையும் பாராட்டுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்வி நிறுவனம் இதுவரை அடைந்துள்ள வளர்ச்சியினைப் பாராட்டும் முகமாகக் கொண்டாடப்படும் பவள விழாவிற்கு எனது மனம் நிறைந்த நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ். பல்கலைக் கழகம்.

நா. பாலகிருஷ்ணன்
பேராசிரியர்,
வணிகவியல், முகாமைத்துவத் துறைத் தலைவர்,

பேராசிரியர் திரு. வ. ஆறுமுகம்

அவர்களின்

# ஆசிச் செய்தி

பவள விழாக் கொண்டாடும் புற்றளை மகாவித்தியாலயம் தனது தொடர்ச்சியான சேவையின் மூலம் தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பெரும் பங்களிப்பினை ஆக்கியுள்ளது. புலோலி வாழ் மக்களின் கல்வியில் கிறீத்தவ மிஷனறிகளின் பங்கைத்தான் நம்பியிருந்த காலத்தில் உள்ளூர் சைவாபிமானிகளின் ஆர்வத்தினால் உருவம் பெற்ற வராத்துப்பளை தமிழ்க் கலவன் பாடசாலை காலப்போக்கில் பெற்ற வளர்ச்சியே இன்றைய இந்நிறுவனம்.

கற்பித்தலில் மட்டும் தனது செயற்பாட்டை முடக்கிக்கொள்ளாது புறவேலைகளிலும் கவனம் செலுத்துவதன் மூலம் இம் மகாவித்தியாலயம் மாணவர்களின் ஆளுமை விருத்தியில் அக்கறைகாட்டியுள்ளது. இதன் வளர் சியில் தம்மை அர்ப்பணித்த ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

இம்மகா வித்தியாலயத்தின் வளர்ச்சி தொடர்ந்து உன்னதநிலையை எய்தவேண்டும் என மனமுவந்து வாழ்த்துகிறேன்.

வ. ஆறுமுகம்

தலைவர்
கல்வியியற்றுறை,
யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

பேராசிரியர் திரு. வீ. கே. கணேசலிங்கம்

அவர்களின்

# ஆசிச் செய்தி

புற்றளை பல பெரியார்கள், அறிஞர்கள் வாழ்ந்துவரும் இடமாகும். புற்றளைப் பிள்ளையார் தேவஸ்தானம் ஒரு புனிதமிக்க ஆலயமாகும். அதனருகில் அமைந்துள்ள புற்றளை மகாவித்தியாலயம் அப்பகுதி மக்களுக்கு கல்வி போதிக்கும் கல்விக்கூடமாக மிளிர்கின்றது. அம்மக்கள் செய்த தவப் பயனாலும், அவர்களது ஆசியாலும், சிறிய ஒன்றாக இருந்த இப்பாட சாலை இன்று பெரும் கல்விக்கூடமாக வளர்ந்திருக்கின்றது. இக்கல்லூரியின் பவள விழாவைக் கொண்டாடுவதில் நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைகின் றோம்.

மிக உயர்ந்த நிலையில் இருக்கின்ற புற்றளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் யாபேரும் இப்பாடசாலையிலேயே பயின்ற பின் மேற்படிப்புக் காக வேறு கல்லூரிகளுக்குச் சென்று மேலும் கற்று முன்னுக்கு வந்தவர்கள் என்பது கண்கூடு. இதற்கு மேலாக அண்மைய கிராமங்களில் உள்ளவர்களும் இங்கு கல்வி கற்று முன்னேறியிருக்கிறார்கள் என்பதும் யாவரும் அறிந்த உண்மை. இந்த முறையில் இம் மகா வித்தியாலயத்தை மேலும் வளம் படுத்தி உயர்ந்த நிலையில் வைக்கவேண்டியது இம்மக்களின் கடமையாகும்.

ஆய்வுகூட வசதிகள், நிர்வாகக் கட்டிடங்கள், வகுப்பறைகள், விளை யாட்டு மைதானம், மலசல கூடங்கள், தண்ணீர் வசதிகள் ஆகியன இப் பாடசாலையில் அமைந்திருக்குமானால் இது மேலும் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை கல்வியைப் பொறுத்தவரையில் திறமையான ஆசிரி யர்கள் சிரமப்பட்டுக் கல்வி கற்பிப்பதனால் இப்பாடசாலை மேலும் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. கிராமப்புறப் பாடசாலை களைத் தரமுயர்த்தி சிறந்த ஆசிரியர்களையும், வசதிகளையும் தருவிப்பத னால் புகழ் பெற்ற பல நகர்ப்புறக் கல்லூரிகளுக்கு ஈடாகக் கிராமப்புறப் பாடசாலைகளை மேம்படுத்தலாம் என்ற கருத்தினைப் பலவாறாகப் பலர் தெரிவித்து வந்தாலும் கூட அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இம் முறையை நடைமுறைப்படுத்தி புற்றளை மகா வித்தியாலயத்தினைச் சிறந்த கல்லூரியாக மிளிரச்செய்தால் எமது பிள்ளைகள் பல மைல்களுக்கப்பால் இருக்கும் கல்லூரிகளை நாடவேண்டிய அவசியம் ஏற்படமாட்டாது.

ஹாட்லிக் கல்லூரி வசதியற்று இருந்த காலத்தில் புற்றளை மகாவித்தியாலயம் கைகொடுத்துதவியது. இதனால் இக்கல்லூரியின் சிறப்பு பலமடங்கு அதிகரித்தது. சிறிய பாடசாலை பெரிய கல்லூரியொன்றிற்கு தமது இடத்தைக் கொடுத்துதவியது என்றால், அப்பாடசாலையின் நல்லெண்ணத்தையும்; புரிந்துணர்வையும் என்னவென்பது.

புற்றளை மகா வித்தியாலயம் எல்லா நன்மைகளையும் பெற்று வசதி படைத்த ஒரு சிறந்த கல்லூரியாகத் திகழவேண்டுமென நாம் ஆசிகூறுவதோடு பொதுமக்கள் யாவரும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து இதனை மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பேராசிரியர். வீ. கே. கணேசலிங்கம்
*B. Sc. ( Hons. ) Cey. M. Sc. ( Hawaii )*
*Ph. D. ( London )*
தலைவர், விலங்கியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை

# பாடசாலை வரலாறு

**முன்னுரை**

19-ம் நூற்றாண்டில் இலங்கை அரசாங்கம் ஆங்கிலேயருடையதாய் இருந்தது. அவர்களுடைய ஆதரவுடன் கிறீஸ்தவ சங்கங்கள் பல, பாடசாலைகள் அமைத்து கல்விமூலம் கிறீஸ்தவ சமயத்தைப் பரப்பின. இந்துப் பிள்ளைகளை மதமாற்றம் செய்வதில் வெற்றியும் கண்டன.

இந்நிலையில் நாவலர் பெருமான் சைவப்பிள்ளைகளுக்குச் சைவச் சூழலில் கல்வி புகட்டுவதை அவாவினார். அவர் முயற்சியால் சைவப் பள்ளிக்கூடங்கள் தோன்றின. சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிற் புகழ்பெற்று மீண்டபின் சைவ சமயத்தவர்களுக்கு மேலும் ஓர் உத்வேகம் பிறந்தது. சைவ சமய சங்கங்களும் புதிய சைவப் பள்ளிக்கூடங்கள் பல தோற்றுவிக்கலாயின. தனி நபர்களும் சைவப் பள்ளிகள் அமைத்தனர்.

புற்றளையைச் சூழவும் கிறீஸ்தவ பாடசாலைகள் வலுப்பெற்றிருந்தன சைவப் பிள்ளைகளுக்கு ஏற்ற ஒரு கல்வி நிலையம் அத்தியாவசியமாயிற்று இதனை உணர்ந்தே எம் மகாவித்தியாலயம் ஆரம்பத்தில் புற்றளைப்பிள்ளையாரை அண்மித்த சூழலில் ஒரு சைவப் பாடசாலையாக, ஒரு கொட்டிலில் 1916இல் ஆரம்பிக்கப்பட்டது. இன்று மகாவித்தியாலயமாகப் பரிணமித்துள்ள எம் கல்லூரி, என்ன நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த பாரம்பரியங்களைப் பேணத் தொடர்ந்தும் முயன்று வருகிறது.

**பாடசாலையை ஆரம்பித்தவர்கள்:**

இப்பாடசாலை நிறுவப்படுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர்கள் புலோலி கிழக்கு வீரகத்தியார் பசுபதி, சி. கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை, விநாயகர் பரமு, கணபதியார் நாகப்பர், கதிர்காமர் கணபதிப்பிள்ளை, சுப்பர் ஆழ்வாப்பிள்ளை, கணபதியார் ஆழ்வாப்பிள்ளை, முருகர் கந்தப்பர், சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை, கதிர்காமர் சின்னத்தம்பி, கந்தப்பர் ஆறுமுகம், வேலப்பர் கணபதிப்பிள்ளை, சின்னத்தம்பியார் வேலுப்பிள்ளை, புலோலி மேற்கு சேதுநாதர் மயில்வாகனம், புலோலி கிழக்கு கந்தப்பர் சங்கரப்பிள்ளை ஆகியோர். இவர்கள் இக் கல்விக்கூடத்தை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை கோவில்பற்றில் புலோலி கிழக்கிலுள்ள பெரிய கக்கிலிசிட்டி என்னும் நாமம் பூண்டதும் எட்டு நிலப்பரப்பு விசாலம் கொண்டதுமான காணி ஒன்றில் திண்ணைப்பள்ளிக்கூடமாக நிறுவினார்கள். இது "புலோலி புற்றளை சாரதாபீட வித்தியாசாலை" என்று அழைக்கப்பட்டது. இதன் எல்லைகளாக கிழக்கே ஒழுங்கையும், வடக்கே வைரவன் முருகனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், மேற்கே புற்றளைப் பிள்ளையார் கோவிலுக்கும் கணபதியார் வேலப்பருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும், தெற்கே கதிர்காமர் முருகப்பருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமுமாக அமைந்தன. ஆரம்பத்தில் 26 மாணவர்கள் வரை கல்விபயின்றனர்.

**பாலனசபைத் தெரிவும் அதிகாரங்களும் வரையறையும்.**

பாடசாலையை ஆரம்பித்தவர்கள் அதைத் திறம்பட நிருவகிப்பதற்கு ஒரு பாலனசபை அமைத்தல் முக்கியமென்ற நோக்குடன். வேலாயுதபிள்ளை அருணாசலம் மனேஜர் (Manager) ஆகவும், சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் (Superintending Trustee) காரியத்தை நடப்பிக்கிறவ

ராகவும், சேதுநாதர் பொன்னையாவை லிகிதராகவும் (Secretary) மற்றும் சுப்பர் கந்தப்பர், சந்திரசேகரர் கணபதிப்பிள்ளை, கதிர்காமர் கந்தப்பர், சி. கணபதியார் சங் கரப்பிள்ளை, பெரியார் வேலப்பர், கந்தர் முருகப்பர், வீரகத்தியார் பசுபதி, சங்கரப் பிள்ளை கணபதிப்பிள்ளை, வல்லியார் கதிர்காமு, கணபதியார் சுப்பர், கணபதி யார் ஆழ்வார், கதிர்காமர் கந்தையா, வ. சிதம்பரநாதர் கணபதிப்பிள்ளை, மாப் பாணர் வேலுப்பிள்ளை, வேதக்குருக்கள் சபாபதிக்குருக்கள், க. கணபதிப்பிள்ளை கந்தையா, கு. கார்த்திகேசர் வேலுப் பிள்ளை ஆகியோரை காரிய கர்த்தாக்க ளாக நியமித்தனர்.

பாடசாலை இவர்களின் பொறுப்பில் இயங்கிவருங்காலத்தில் உறுப்பினர்தொகை அதிகமாக இருந்ததால் வசதிக்குறைவு ஏற்படவே, வித்தியாசாலையின் சகல காரி யங்களையும் நடத்துவதற்காக 11 பேர் கொண்ட ஒரு அதிகாரசபை (Board of Directors) யை நிறுவி, அவர்களிடமே முழு அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டன. சபை உறுப்பினர்களாக புலோலி கிழக்கு சங்கரப் பிள்ளை சுப்பிரமணியம், கதிர்காமர் கந் தப்பர், பெரியார் வேலப்பர், வல்லியார் கதிர்காமு, கணபதியார் சிதம்பரப்பிள்ளை; முருகப்பர் கோணப்பர், கணபதிப்பிள்ளை கந்தையா, சேதுநாதர் பொன்னையா, கு. கார்த்திகேசர் வேலுப்பிள்ளை, வீரகத் தியார் முருகேசு, முருகர் கார்த்திகேசு ஆகி யோர் விளங்கினர்.

இவ்வதிகார சபைக்கு சில வரையறை களுடன் கூடிய அதிகாரங்களும் வழங்கப் பட்டிருந்தன. அவையாவன, வித்தியா சாலைக்கு வேண்டிய பணத்தை அறவிடு தல் நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளு தல், வித்தியாசாலையின் நன்மைக்குத் தேவையான பணத்தைச் செலவழித்தல், எஞ் சும் பணத்தை வட்டி முதலியவற்றிற் கொடுத்து விருத்தி செய்தல், பிரமாணங் களை வகுத்தல், தங்களில் எவரொருவர் மரித்தோ, அல்லது ஒருவர் குறிந்த சபை யினின்று விலகவோ சம்மதித்தால் அவருக் குப் பதிலாக, ஆரம்ப அங்கத்தினர் அறு பத்தெட்டு பேரில் ஒருவரை அல்லது அவர் களின் சந்ததியிலுள்ள ஒருவரை நியமித் தல் போன்றவையே.

இச்சபையார் தங்களுள் ஒருவரை அக்கிராசனராகவும், ஒருவரை லிகிதராக வும், ஒருவரை பொக்கிஷாதிபதியாகவும் நிய மித்து வித்தியாசாலையின் விடயங்களை நடத்த வேண்டியது அவர்கள் பொறுப்பாக இருந்தது.

## காணி நன்கொடை

இவ்வாறு பாடசாலை இயங்கும் பொழுது புலோலி கிழக்கு கணபதியார் சுப் பரும் பெண் சின்னாச்சியும் ஆகிய இருவ ரும், பாடசாலை அமைந்த இவ்வாத னத்தை, இப்பாடசாலைக்கு 1918-ம் ஆண்டு பங்குனி 8-ந் திகதி நொத்தாரிஸ் பரமு சிதம்பரப்பிள்ளை முகதாவில் முடிந்த 15070-ம் இலக்க உறுதிப்படி தருமசாதனம் செய்து, இப்பாடசாலையின் அங்கத்தவர் களாக இருந்த புலோலி மேற்கு க. கண பதிப்பிள்ளை கந்தையா, மு. கார்த்திகேசு வேலுப்பிள்ளை, புலோலி கிழக்கு வேதக் குருக்கள் சபாபதிக்குருக்கள், சந்திரசேகரர் கணபதிப்பிள்ளை, சங்கரப்பிள்ளை சுப்பிர மணியம் ஆகிய ஐவர் பொறுப்பில் தரும நன்கொடையாகவும் ஒப்படைத்தனர்.

## நிபந்தனைகள்

புற்றளை சாரதாபீட வித்தியா சாலையை பரிபாலிப்பவர்களும் அல்லது அவர்கள் இடத்துக்கு வருபவர்களும், அல் லது மனேஜராக வருபவரும் குறித்த கட் டுக்கோப்புகளுக் கிணங்க பாவித்து வருவ தற்குச் சரியான உரித்திருக்குமென்று கூறப்

1916ல்...





பட்டிருக்கிற அதே நேரத்தில் பாட சாலை அமைந்திருக்கும் ஆதனம் வித்தியா சாலைக்காகப் பயன்படுத்தப்படாத காலத்தில் அது புற்றளைப் பிள்ளையார் கோவிலுக்குச் சொந்தமாகச் சேரவேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த ஆதனத்தை ஆட்சிபண்ணி அதன் பிரயோசனத்தை வருடந்தோறும் நடந்துவரும் விழாக்களில் இரண்டாம்நாள் விழாவை வருடப்படிக்குத் தக்கதாய் நடத்தி வர வேண்டுமென்றும் தர்மகர்த்தாக்கள் நிபந்தனை விதித்துள்ளனர். எனினும் வித்தியாசாலைக்காக ஆதனம் பாவிக்கப்படாத காலத்தில் மனேஜராய் வருபவரெவரோ அவர் பாவித்து வருவதுடன், கட்டுக்கோப்பில் உள்ளபடி தர்மகர்த்தாக்களுக்காவது அல்லது அவர்கள் உரிமைக்காரருக்காவது யாதொரு பாவிப்புரித்துமில்லை என்றும் நிபந்தனை கூறுகிறது.

## பாடசாலையில் கல்வி வளர்ச்சி

இது இவ்வாறிருக்க, எங்கள் பாடசாலையின் கல்விநிலை முன்னேற்றம்பற்றி ஆராய்வது நலம். 1919இல் புற்றளை சாரதாபீட வித்தியாசாலையாகப் பதிவு செய்யப்பட்டிருந்த எமது பாடசாலை, 1934இல் "வராத்துப்பளை கனிட்ட இரண்டாந்தர பாடசாலை"யாகத் தரமுயர்த்தப்பட்டது. இதன் மனேஜராக திரு. V. அருணாசலம் இருந்து வந்தார். தலைமை ஆசிரியராக திரு. S. சிவப்பிரகாசம் விளங்கினார். இக்கால கட்டத்தில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த பெற்றோர், இப்பாடசாலையில் ஆங்கில போதனையும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று விருப்பங்கொண்டனர். இங்கு பயின்ற மாணவர்களின் பெற்றோரின் பொருளாதார நிலை குறைவாக இருந்த போதிலும், மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருதி ஆங்கில வகுப்புகளை ஆரம்பிப்பதில் அதிக தீவிரம் காட்டினர்.

1935இல் இப்பாடசாலையின் பெயரும் "வராத்துப்பளை இந்து தமிழ் கலவன் பாடசாலை" (கனியார்) எனப் பெயர் மாற்றப்பட்டு, பின்பு சிரேட்ட இரண்டாந்தரப் பாடசாலையாக 1936இல் தரம் உயர்த்தப்பட்டது. தலைமையாசிரியராக திரு. த. சிதம்பரப்பிள்ளை கடமையை ஏற்றுக்கொண்டார். சிரேட்ட பாடசாலை பத்திர வகுப்புகள் வரை இங்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வகுப்புக்கு அயல் கிராமங்கள் தும்பளை, அல்வாய், வரணி, வராத்துப்பளை மாணவர்களும் வந்துசேர்ந்தனர்: மாணவர் தொகை 104 ஆகவும் ஆசிரியர் தொகை 12 ஆகவும் இருந்தது.

ஆங்கில வகுப்பு வைக்கவேண்டும் என்ற அவாக்கொண்ட பெற்றோருக்கு உதவியாக இளைஞர்களும் சேர்ந்து, ரூபா 2500/— சேகரித்து, புதிய வகுப்புத் தொடங்குவதற்கான கட்டடம் ஒன்றையும் அமைத்து பாடசாலைக்கு வழங்கினார்கள். தலைமை ஆசிரியரினால் ஆங்கிலம் கற்பிப்பதற்குரிய நேரசூசியும் தயாரிக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ஆனால், இதைப் பாடசாலை முகாமையாளர் அனுமதிக்கவில்லை. ஏமாற்றமடைந்த பெற்றோரில் 136 பேர் சேர்ந்து மகஜர் ஒன்றைத் தயாரித்து கையொப்பமிட்டு, அதை யாழ்ப்பாணத்திலுள்ள பிரிவுக்கல்வி அதிகாரிக்கு 10-2-38இல் அனுப்பி வைத்தனர். அவர்கள் தங்கள் முயற்சியில் பின்பு வெற்றியும் கண்டனர்.

1939இல் மாணவர் தொகை 245 ஆக உயர்ந்தது. 14 ஆசிரியர் கற்பித்தனர். இவர்களில் ஒரு சிலர் பயிற்றப்பட்டவர்கள்.

இக்காலத்தில் புலோலி தெற்கு தம்பு சிதம்பரப்பிள்ளை, கந்தையா சிதம்பரப்பிள்ளை, கணபதிப்பிள்ளை சின்னையா பெரியதம்பி கணபதிப்பிள்ளை, வேலப்பர் சோமசுந்தரம் ஆகிய ஐவரும் இந்த வித்

தியாசாலைக்காக உதவிய பணத்தைக் கொண்டும், மேலும் கந்தையா சிதம்பரப் பிள்ளை பல இடங்களிலும், பலரிடத்திலும் சேகரித்த பணத்தைக்கொண்டும், பாடசாலைக் காணியில் தெற்குப் பக்கமாக ஒரு கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்தார்கள். இன்னும் வேறு சில திருத்தங்களைச் செய்தும் கொடுத்தார்கள். கந்தையா சிதம்பரப் பிள்ளை ஏறக்குறைய ரூபா 2620/-ஐ வித்தியாசாலைக்காகச் சேகரித்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 194?-ம் ஆண்டு ஆடிமாதம் 27-ந் திகதி நொத்தாரிசு சி. மயில்வாகனம் முகதாவில் முடிந்த 4827-ம் இலக்க உறுதிப்படி தரும நன்கொடை கொடுத்தவர்களாகிய கணபதியார் சுப்பரும், பெண் சின்னாச்சிப்பிள்ளையும், சேதுநாதர் பொன்னையா, கணபதிப்பிள்ளை தாமோதரம், கணபதிப்பிள்ளை சின்னையா, பரமு சுப்பிரமணியம் வல்லியப்பர் கதிர்காமு. கந்தையா சேனாதிராசா ஆகியோரும் தரும பரிபாலகர்களாக நியமனஞ் செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### பாடசாலைக் காணி வழக்கு

மேலே கூறப்பட்ட கணபதியர் சுப்பரின் தம்பியின் மகனாகிய புலோலி கிழக்கு விநாயகர் கணபதிப்பிள்ளை என்பவர் யாழ்ப்பாண டிஸ்திரிக் கோட்டில் 847-ம் இலக்க வழக்கில், வித்தியாசாலை ஆதனத்தில் தனக்கு அரைவாசியுரித்தென்று வாதாடினார் அவ்வழக்கில் தரும நன்கொடை கொடுத்தவர்கள் அவ்வரைவாசியின் விலையை அவருக்குக் கொடுத்து. அவ்வரைவாசியின் உரித்தை பாடசாலைக்குரிய தாக்கினார்கள். இவ்விபரங்கள் 1-10-43 ம் ஆண்டு நொத்தாரிஸ் வி. க. சுப்பிரமணியம் முகதாவில் முடிந்த 2123-ம் இலக்க உறுதியில் விபரிக்கப்பட்டுள்ளன.

### பாடசாலையின் தரம் மாற்றம் பெறுதல்

சிரேட்ட இரண்டாந்தரப் பாடசாலையாக இருந்த எமது வித்தியாசாலை பின்பு மேலிடத்து அறிவித்தலுக்கமைய ஆரம்ப பாடசாலையாகவே இயங்க வேண்டுமென்று பணிக்கப்பட்டது. இம்மாற்றம் மாணவருக்கும், பெற்றோருக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. 1941இல் 5-ம் வகுப்பு வரையே இருந்தது 352 மாணவர்கள் வரை கல்வி பயின்றார்கள். எனினும் பெற்றோரின் விடாமுயற்சியாலும் நெருக்குதலை அவர்கள் உண்டுபண்ணினமையாலும், 1954இல் 6-ம் வகுப்பு வைக்க அனுமதி வழங்கப்பட்டது. தொடர்ந்தும் 1955இல் 7-ம் வகுப்பு வைப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறு தரம் குறைக்கப்பட்ட பாடசாலை படிப்படியாக முன்னேற்றம் காண ஆரம்பித்தது.

1956இல் 430 மாணவர்கள் கல்வி கற்றனர்; 12 ஆசிரியர்கள் சேவையாற்றினார்கள். 1961இல் V-ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் 6 மாணவர்கள் சித்தியடைந்தனர். குறிப்பிட்ட அளவு முன்னேற்றம் இங்கு காணப்பட்டது. வகுப்புகளில் மாணவர் தொகை கூடிக்கொண்டு வந்தது.

### பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றமை

1960 – 61 காலப்பகுதியில் சகல பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்க முன்வந்தது பல இடங்களிலுமிருந்து எதிர்ப்பு வந்தபோதும் அரசாங்கம் எதையும் பொருட்படுத்தவில்லை. இக்காலப்பகுதியில் கல்வி அமைச்சராயிருந்த மதிப்புக்குரிய ஜனாப் பதியூதின் மஹ்மூத் பாடசாலை சுவீகரிப்பை வர்த்தமானிமூலம் வெளியிட்டார். விபரம் பின்வருமாறு:

Assisted Schools and Training Colleges (Supplementary Provisions) Act. No. 8 of 1961

Vesting order No. 1620
J/Varathupalai Hindu Private Tamil Mixed School Puloly South, Point Pedro

By Virtue of the powers vested in me by section 4 of the Assisted Schools and Training Colleges (Supplementary Provisions) Act No. 8 of 1961, I, Badi-ud-din Mahmud, Minister of Education and Broadcasting, do hereby declare that with effect from the 15th day of August 1962 all the property specified in the schedule appended here to, being property liable to vesting, shall vest in the Crown.

Schedule

The Premises in which J/Varathupalai Hindu Private Tamil Mixed School was conducted and maintained on July 21, 1960 Viz. all that portions from and out of the land called and known as Periakakkuluciddi and Sinnakakkuluciddi situated in Puloly South of Vadamarachy Pattu.

Sgd.
Minister of Education and Broadcasting

Sir Earnest De Silva Mawatha,
Colombo – 3
July 7. 1962

பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றமை தொடர்பாக உடுப்பிட்டிக்கு பாடசாலைப் பரிசோதகராக இருந்த திரு. வீ. தர்மசங்கரியின் கடிதம் கூறுவது :

The Director of Education
Branch N3
Colombo – 3

J/Varathupalai Hindu Private Tamil Mixed School, Puloly South, Point Pedro.

Take Over,

Reference Notice published in Government Gazette Extraordinary No. 13225 of 23rd July 1962 and DE's notice under section 12 (1) of the Act No. 8 of 1961 in Gazette Extra ordinary No. 13729 of 13th August 1963. I took over the property of the above school on 29th August 1963.

(2) The particulars given in the forms G1 to G7 and F1 to F11 sent by the manager in terms of DE's circular No. 34 of 1960 and the Inventory items have been checked and certified statement from the Principal / Head Master on Page 39 of the set of forms on Furniture, fittings and equipment seen.

(3) Also cash balances available with the Manager / Principal verified and obtained stamped receipts from them and the amounts in their charge in the usual form.

Sgd. V. Tharmasingary
Inspector of Schools
Udupiddy

Education Office
Jaffna. 29th August 1963

எங்கள் பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றபொழுது, அது J/வராத்துப்பளை இந்து தனியார் கலவன் பாடசாலை என நாமம் பெற்றிருந்தது சிரேட்ட பாடசாலைப்பத்திர வகுப்புவரையும் இருந்தன. இப்பரீட்சைக்கு 3பேர் தோற்றினர். மாணவர் தொகை 46 ஆகவும் ஆசிரியர்கள் 16 ஆகவும் இருந்தது.

1964 இல் 5–ம் வகுப்பில் மொத்தம் 35 மாணவர்கள் கல்வி பயின்றார்கள். அந்த வகுப்புக்கு வடமாகாண தமிழ் ஆசிரியர் சங்கம் (NPTTA) நடத்திய பரீட்சையில் 'A' பிரிவில் 10 மாணவரும், 'B' பிரிவில் 19 பேரும், 'C' பிரிவில் ஐவரும், 'D' பிரிவில் மாணவர் ஒருவருமாக சித்தியடைந்தனர்; கனிட்ட பாடசாலை பத்திர (J.S.C) மாணவர்களுக்கு அகில இலங்கை தமிழ் ஆசிரியர்

சங்கம் (ACTTA) நடத்திய பரீட்சையில் இரு வர் முதலாம் பிரிவிலும், மூவர் இரண்டாம் பிரிவிலும், சித்தியடைந்தமை குறிப்பிடத் தக்கது.

## அடுத்த பெயர்மாற்றம்

இப்பாடசாலை புற்றளை பிள்ளையார் கோயிலுக்கண்மையில் அமைவதாலும், விநா யகப் பெருமானின் பார்வையிலுள்ள சூழ லில் இது அமைந்திருப்பதாலும், இதுவரை காலமும் ''வராத்துப்பளை இந்து தனியார் தமிழ்கலவன் பாடசாலை' என்றிருந்த பெயரை ''புற்றளை வித்தியாலயம்'' என்று மாற்றுவதற்கு 1964க்கு முன்பே முயற்சி கள் பல மேற்கொள்ளப்பட்டன. இம்முயற் சியில் அப்போதிருந்த பெற்றார் ஆசிரியர் சங்கம் அயராது உழைத்தமை குறிப்பிடத் தக்கது. பாடசாலைச்சூழலும் கோவிற்சூழ லும் ஈச்சம்பற்றையாகவே இருந்தபொழுது அதைச் சங்க உறுப்பினர் துப்புரவு செய்து பிள்ளைகள் கல்விகற்பதற்குரிய நல்ல தோற் றத்தை உருவாக்கிக்கொடுத்தமை பாராட்டு தற்குரியது. இச்சங்கத்தின் தலைவராக திரு த. சிதம்பரப்பிள்ளையும், காரியதரிசி யாக திரு. வி வைரமுத்துவும், அவர்களுக் குதவியாக வே. சோமசுந்தரம், பே சின்னத் தம்பி, க பொன்னையா, சு சந்திரசேகரம், க. வேலுப்பிள்ளை, தா வேலுப்பிள்ளை, க. கணபதிப்பிள்ளை ஆகியோரும் முன் னின்று பாடசாலைக்காகத் தம்மை அர்ப் பணித்தமை போற்றுதற்குரியது

மேலும் பாடசாலைப் பயர் மாற் றம் தொடர்பாக, கல்விக்கந்தோருக்கும், பெற்றார் ஆசிரியர் சங்கத்திற்கும் பிரதி நிதிகள் சபையில் உடுப்பிட்டித்தொகுதி அங் கத்தவர் திரு. மு. சிவசிதம்பரத்துக்கும், பாட சாலைப் பரிசோதகர் திரு. வீ தர்மசங்கரி, வடமாநிலக் கல்வி அதிபதி திரு சி. தணிகா சலம் ஆகியோருக்கிடையிலும் கடிதத் தொடர்புகள் அடிக்கடி நடைபெற்றன.

"Siva Bhavanam"
Saraiady
Puloly South,
Point Pedro

ADE. through C In 25-10-64
Atchuvely

Dear Sir,

Change of name of school - Puloly south Point Pedro.

I am directed by the Executive Committee of the P.T.A. to forward a copy of the resolution appended below and request you to be good enough to effect the change as early as possible.

Yours faithfully,
Sgd. V. Vyramuthu
Hony. Secretary P.T.A.

Copy of the Resolution,

We the members of the P.T.A do hereby unanimously resolve this 8th day August 1964. at this Annual General Meeting that the Executive Committee of this P.T.A. should write to the Assistant Director of Education to have the present name of school Varathupalai Tamil Mixed School attend nto the proposed name Puttalai Vidyalayam before the end of this year.

Copy forwarded to A. D. Referenee his letter No. J/AC 387 of 21.12.64.

27-01-65

Really the school is in Puttalai and not in Varathupalai. I recommend that this suggestion made by the P.T.A. be Considered.

Sgd. V. Tharmasangary
Inspector of Schools / Udupiddy
27.1.65

இவ்வாறு வராத்துப்பளை இந்து தமிழ் கலவன் பாடசாலையென அழைக்கப்பட்டு வந்த எமதுபாடசாலை 1-7-65 முதல் புற்

றளை வித்தியாலயமாக மலர்ந்தது. அவ்வாண்டில் பாடசாலையில் 464 மாணவர்கள் கல்வி பயின்றார்கள். 17 ஆசிரியர் சேவை யாற்றினர். இவர்களில் பயிற்றப்பட்ட ஆசிரியரும் அடங்குவர்.

பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்க்குமிடத்து வடமராட்சி தமிழ் ஆசிரியர் சங்கம் (VTTA) நடத்திய V-ம் வகுப்பு பரீட்சையில் 45/53ம், அகில இலங்கை தமிழ் ஆசிரிய சங்கம்நடத்திய கனிட்ட பாடசாலை பத்திர (J.S.C) பரீட்சையில் 9/10 மாக சித்தியெய்தினர். தொடர்ந்தும் அடுத்த வருடத்தில் மாணவர் தொகை 490 ஆக அதிகரித்தது. குறித்தவருடத்தில் பரீட்சை முடிவுகளைப் பார்க்குமிடத்து, வடமராட்சி தமிழ் ஆசிரியர் சங்கம் நடத்திய III-ம் வகுப்பு சோதனையில் 34/35-ம், வ. ம. த. ஆ. ச (NPTTA) நடத்திய V-ம் வகுப்பில் 35/45-ம், அ.இ.த.ஆ.ச. (ACTTA நடத்திய கனிட்ட பாடசாலைபத்திர (J.S.C) வகுப்பில் 3/3-ம் சித்தி அடைந்தார்கள்.

1967 இல் மாணவர்தொகை மேலும் 506 ஆக உயர்ந்தது. ஆசிரியரும் 18 பேர் சேவை செய்தனர் இவர்களுள் விசேடபதவியிலிருக்கும் அதிபரும், பயிற்றப்பட்ட விஞ்ஞான, கணித, பொது ஆசிரியர்களும் அடங்குவர். க.பொ.த (சா/த) பரீட்சையில் 5/8 பேர் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. பாடசாலைப் பரிசோதகரும் "ஒரு வித்தியாலயத்திற்கு இப்பெறுபேறு மிகச் சிறந்தது" என்று குறிப்பு எழுதியிருப்பதும் போற்றுதற்குரியது.

## நான்காவது தடவையாகப் பெயர் மாற்றம்

இவ்வித்தியாலத்தில் 32 வருடங்களாக தன்னலமற்ற சேவையாற்றிய திரு. த சிதம்பரப்பிள்ளை 1-6-68 இல் இளைப்பாறினார். இப்பாடசாலையில் தமது நீண்ட சேவைக்காலத்தை, ஊர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், பாடசாலை அபிவிருத்திக்காகவும், மற்றும் புலோலி வாழ் மக்கள் சிறந்த கல்விப் பின்னணியைப் பெறுவதற்காகவும் அர்ப்பணித்த த. சிதம்பரப்பிள்ளை அவர்களையும் அவரோடு அயராது உழைத்த சக ஆசிரியர்களையும் இச் சந்தர்ப்பத்தில் நாம் நன்றிக்கடனுடன் நினைவு கூருவது எங்கள் கடமையாகும். இவர் இளைப்பாறும்பொழுது, பாடசாலையில் சிரேட்ட ஆசிரியராக இருந்த வித்துவான் சி. சுப்பிரமணியம் 2-6-68 முதல் 14-6-68 வரை அதிபராகக் கடமையாற்றினார்.

மேலும் இச் சிற்றூரில் உள்ள பிள்ளைகளுக்கு இறைபக்தியையும், சிறந்த கல்வியையும், உயர்ந்த பண்புகளையும் வளர்க்க வேண்டுமென்ற அவாவுடன் இருந்த பெற்றோர் பாடசாலையின் தரம் உயர்த்தப்படவேண்டும் என்ற விருப்பத்துடன் கல்வி அதிபருக்கு மேன்முறையீடு செய்தனர். இதன் விளைவாக 'புற்றளை வித்தியாலயம்' 'புற்றளை மகா வித்தியாலய'மாக 1968இல் பரிணமித்தது. இதன் முதல் அதிபராக பயிற்றப்பட்ட ஆங்கில தராதரமுள்ள திரு. ந. நடராசா அவர்களை அப்போதிருந்த வடமாநிலக் கல்வி அதிபதி திரு. சி. தணிகாசலம் அவர்கள் தேர்ந்தெடுத்து நியமித்தார். வளர்ந்து வரும் பாடசாலையை மேலும் வளர்க்க வேண்டும் என்ற நோக்குடனேயே இப்படி ஒரு சிறந்த அதிபரை அவர் தேர்ந்தெடுத்தார் என்று கூறுவது மிகப் பொருத்தமானது. 15-6-68இல் திரு. நடராசா பதவியேற்றார். இவ்வாண்டில் மாணவர் தொகை 506 ஆகவும், ஆசிரியர் தொகை 20 ஆகவும் இருந்தது.

## பாடசாலை விஸ்தரிக்கப்படல்

பிற்காலத்தில் பாடசாலை நல்ல வளர்ச்சி கண்டதையிட்டு, பெற்றோர், இங்கு உயர் வகுப்புக்கள் ஆரம்பிக்க வேண்டும் என்ற சிந்தனையோடு, பாடசலைக்குத் தெற்குப்புறமாக உள்ள தோட்டநிலத்தை நாடினர். இதன் விளைவாக அரசாங்கம் மேலதிக நிலம் பாடசாலைக்கு சுவீகரித்து கையளித்தது.

பகுதி III—காணிகள்— இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை - 1972-ம் வருடம் பெப்புருவரி மாதம் 3-ந் திகதி.

1964-ம் ஆண்டின் 28 ம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்

பட்ட வாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதாயிருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் 1964-ம் ஆண்டின் 28-ம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 5-ம் பிரிவின் (1)ம் உட்பிரிவின் பிரகாரம் காணி, விவசாய அமைச்சர் ஹெக்டர் சேனரத் இராஜகருணா பண்டா கொப்பேகடுவ ஆகிய நரன் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சி காரியதரிசிப் பிரிவு புலோலி தெற்கு கிராமத்திலமைந்திருக்கும் 0ஏ 3றூ 08.0 பேர்ச் பரப்பளவு கொண்ட "பெரியகாக்கிலாசிட்டி" "சின்னகாக்கிலாசிட்டி" என்றழைக்கப்படுகின்ற காணியின் எல்லைகள் பின்வருமாறு:—

வடக்கு : யா/புற்றளை மகாவித்தியாலயமும் அதன் வளவும் (முடிக்குரியது

கிழக்கு : பொதுவேலைப்பகுதி வீதி

தெற்கு : புத்தளை விநாயகர் கோவிலும் அதன் வளவும், வீரகத்தியர் செல்லையாவும் மறுபேரும் உரிமை கோரும் பாதையும.

மேற்கு : வீரகத்தியார் செல்லையா உரிமை கோரும் காக்கிலாசிட்டி.

கொழும்பு

1972-ம் ஆண்டு சனவரி மாதம் 8-ந் திகதி

எச். எஸ். ஆர். பி. கொப்பேகடுவ

விவசாய காணி அமைச்சர்

3-2-72-ந் திகதி வர்த்தமானி இல. 14,996

இதன் பிரகாரம் இத்தோட்ட நிலம் சுவீகரிக்கப்பட்டு பாடசாலைக்கு வழங்கப்பட்டது. மேலும் இத்தோட்ட நிலத்தின் நட்ட ஈட்டுத் தொகைக்காக முன்னாள் வடமாநிலக் கல்வி அதிபதி திரு. சி. தணிகாசலம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பிரதிநிதிகள் சபையில் உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் தன் தொகுதிக்கென்று ஒதுக்கிய பணம் முழுவதையும் இந் நிலம் பெறுவதற்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

31-12-1970இல் திரு. ந. நடராசா அவர்கள் இருவருட அயராத சேவையின் பின் இளைப்பாறினார்.


## பாடசாலை மேலும் வளர்ச்சிபெறல்


1-1-1971இல் கணித, கல்வியியல் மேற்படிப்பு பட்டதாரி திரு. சி. தருமலிங்கம் அதிபரானார் இவர் சேவையாற்றிய காலம் பாடசாலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் இடம்பெற்ற காலமாகும்.

இவர் காலம் பெற்றார் ஆசிரியர் சங்கம் நடத்திய விழாவொன்றையும் குறிப்பிடவேண்டி இருக்கிறது. 1972இல் இவ்விழா கொண்டாடப்பட்டது. இதன் போஷகராக திரு. சி. தணிகாசலம் அவர்கள் விளங்கினார். பிரதம விருந்தினராக அப்போதிருந்த பிரதம கல்வி அதிகாரி திரு. K. கனகசபாபதி கலந்துகொண்டு சிறப்பித்தார். மற்றும் பாடசாலையில் வெங்காயம் உருளைக்கிழங்கு பயிரிட்டு அகில இலங்கை விவசாயப் போட்டியிலும் பங்குபற்றினார்கள். வட்டாரமட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றார்கள். விவசாய ஆசிரியராக இருந்து, மாணவருக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர் திரு. வீ. வல்லிபுரம் அவர்களே அவருக்கு எங்கள் பாராட்டுக்கள்.

இதேயாண்டில் 5-ம் வகுப்பு பரீட்சைக்கு 54பேர் தோற்றினார்கள். 'A' பிரிவில் 30 மாணவரும், 'B' பிரிவில் 9 ம், 'C' பிரிவில் 5 பேருமாகச் சித்தியடைந்தனர். பாடசாலையில் 796 மாணவர் கல்விகற்றனர். 26 ஆசிரியர் சேவையாற்றினர். 1973 இல் க. பொ. த. சா/த பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் 17 பேர் க. பொ. த. உ/தக்கு தகைமை பெற்றனர். இதே வருடத்தில் பாடசாலைப்பிள்ளைகள் திருக்கேதீஸ்வரத்துக்கும் மற்றும் இடங்களுக்கும் சுற்றுலா ஒன்றையும் மேற்கொண்டனர்.

1919ல்...





1974 இல் இப்பாடசாலையின் பழைய மாணவர் திரு பே. சின்னத்தம்பி அவர்கள் '100 × 20' கட்டடம் ஒன்றை தன்சொந்த செலவில் கட்டுவித்து பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தமை போற்றுதற்குரியது. மேலும் அவரின் உதவியுடன் பாடசாலை மண்டபம் ஒன்றும், விஞ்ஞான ஆய்வு கூடமாக மாற்றப்பட்டது புதுக்கட்டடத்தை திரு. T. மாணிக்கவாசகர் திறந்துவைத்தார். விஞ்ஞான ஆய்வுகூடத்தை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. K. ஜெயக்கொடி திறந்துவைத்தார். இவ்வாறு பல பிரமுகர்கள் கலந்துகொண்ட விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1975 இல் நடந்த தேசிய கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (NCGE) பரீட்சையில் 17 மாணவரும், க. பொ. த. (சா/த) பரீட்சையில் 16 பேரும், க. பொ த. (உ/த) க்குத் தகுதிபெற்றனர். 1976இல் 38 பேர் தேசிய உயர்கல்விச் சான்றிதழ் பரீட்சைக்குத் (HNCE) தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. அவர்களில், விஞ்ஞானப்பிரிவுக்கு 30 பேரும், வர்த்தகப்பிரிவுக்கு இருவரும், கலைப்பிரிவுக்கு அறுவரும் அடங்குவர். 1977 இல் எங்கள் பாடசாலையில் தேசிய உயர்கல்விச் சான்றிதழ் (HNCE) விஞ்ஞான வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதில 32 மாணவர் சேர்ந்தனர். 1979 இல் 45 மாணவர் உயர்தரத்துக்குத் தகுதி பெற்றமை போற்றுதற்குரியது. இவர்களில் கலைப்பிரிவில் 30 பேரும், விஞ்ஞானப்பிரிவில் 15 மாணவரும் அடங்குவர். இவ்வருடம் மாணவர்தொகை 748 ஆகவும் ஆசிரிய வளம் 21 ஆகவும் இருந்தது.

1980–ம் ஆண்டு திரும்பவும் க. பொ. த. (உ/த) பரீட்சை (இடைக்காலத்திட்டம்) ஓகஸ்டில் நடைபெற்றது. அதில் எங்கள் பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களில் ஒருவர் 4 'C' ம், இன்னொருவர் 4 'S' ம், மற்றவர் 3 'S' ம், 1 'C' ம் பெற்றனர் மிகக்குறைந்த வசதியோடு இம்மாணவர்கள் இப்பெறுபேறுகளைப் பெற்றமை வரவேற்கத்தக்கது. அத்துடன் அவர்களில் ஒருவருக்குப் பின்பு பல்கலைக்கழக அனுமதி கிடைத்தமை பாராட்டுதற்குரியது.

இவ்வாறு எங்கள் பாடசாலையில் மாணவ வளம் உயர்தர வகுப்புக்கு அதிகரித்துக் கொண்டுபோன சமயம், அவ்வகுப்புகளுக்கு வேண்டிய விஞ்ஞான ஆசிரிய வளம் இல்லாமையினால் புதிய உயர்தர விஞ்ஞான வகுப்புகளை ஆரம்பித்த பாடசாலைகளில் அவ்வவ் வகுப்புகளைத் தற்காலிகமாக நிறுத்தும்படி வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவை இடைநிறுத்தப்பட்டமை துரதிட்டவசமாகும்.

இதேகாலத்தில் எங்கள் மாணவர்கள் யாழ். குடாநாடு முழுவதும் சுற்றுலா ஒன்றையும் மேற்கொண்டனர். இவ்வருடம், நாங்கள் அகிலஇலங்கை விவசாயப் போட்டியிலும் பங்குபற்றினோம். யாழ். மாவட்டப் போட்டியில் எங்கள் பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றது.

தொடர்ந்து 1980லும் எங்கள் பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களில் 17 பேர் க. பொ. த. (உ/த)க்குத் தகுதி பெற்றிருந்தனர். அவர்களில் 15 பேர் விஞ்ஞானப் பிரிவிலும் இரண்டுபேர் வர்த்தகப் பிரிவிலும் அடங்குவர். மாணவர் தொகை 700ஆக இருந்தது. ஆசிரியர் 21பேர் கடமையாற்றினார்கள். 1986, 1987இல் முறையே 17 பேரும், 20 பேரும் க.பொ.த. (உ/த)க்குத் தகுதி பெற்றனர். இவ்வாறு திரு சி. தருமலிங்கம் அவர்களின் காலத்தில் பாடசாலை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டது. 25–12–87இல் திரு. சி. தருமலிங்கம் இளைப்பாற 26–12-87இல் அதிபர் பதவி இன்றைய அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.

1989இலும் 17 மாணவர் க. பொ. த. (உ/த)க்குத் தெரிவானார்கள். அவர்களில் விஞ்ஞானப்பிரிவில் 12 பேரும், வர்த்தகப் பிரிவில் இருவரும் கலைப்பிரிவில் மூவரும் அடங்குவா. க. பொ, த. (சா / த) பெறுபேறுகளை எங்கள் பாடசாலையில் நாம் அவதானிக்கு மிடத்து, வருடாவருடம் சராசரியாக 15 மாணவர்கள் பெரிய பாடசாலைகளுக்கு உயர் கல்விக்காக விலகிச் செல்வது குறிப்பிடத்தக்கது. மற்றும் ஆண்டு

5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு களைக் கவனிக்குமிடத்து. இவ்வாண்டில் எங்கள் பாடசாலையிலிருந்து 14 மாணவர் கள் சித்தியெய்தினர். இவ்வெண்ணிக்கை கோட்ட மட்டத்தில் மிகக் கூடுதலானது. இது நாம் பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். அத்துடன் புலமைப்பரிசில் பெற்ற மாணவர் களில் செல்வி க. சிவதர்சினி 186 புள்ளி களைப் பெற்று தேசியமட்டத்தில் மூன்றாம் இடத்தையும், யாழ் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றமை ஒரு சாதனையாகும். இதற்கு கல்வி அமைச் சிலிருந்து இப்பிள்ளைக்கும், பெற்றோருக் கும் யப்பான் நாட்டில் சுற்றுலா ஒன்றை இலவசமாக மேற்கொள்வதற்கு அழைப்பும் கிடைக்கப்பெற்றமை மகுடம் வைத்தாற் போல் அமைகிறது. பாடசாலையின் பெரு மையை மேலோங்கச்செய்த இம்மாணவிக்கு எங்கள் அன்புகனிந்த வாழ்த்துக்கள்.

1991இல் நாம் எடுத்த முயற்சியினால் எங்கள் பாடசாலையில் க.பொ.த (உ/த) கலைப்பிரிவு ஆரம்பிப்பதற்கு 25-07-91முதல் அனுமதி கிடைத்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் இப்பொழுதுள்ள வடமராட்சிப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ. செல்லத்துரை அவர்களும் உதவிக் கல் விப்பணிப்பாளர் சே. ஏகாம்பரநாதன் அவர் களும் எமது பழைய மாணவர்கள் என்பதை யிட்டுப் பூரிப்படைகிறோம் பாடசாலைச் சூழலில் அவர்கள் குடிகொண்டிருக்கிறார் கள். ஆதலால் எங்கள் தேவைகளை நாம் அவர்களிடம் மனந்திறந்து எடுத்துரைப்பது இலகுவாக உள்ளது. அவர்களும் அவற்றை அன்புடன் செவிமடுத்து, ஏற்று, தங்களா லான உதவிகளைப் பாரபட்சமின்றி நல்கு வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

## முடிவுரை

கடந்த காலத்தில் ஹாட்லிக்கல்லூரி, நாம் எம்முடன் கலந்து இருந்த நினைவு களை ஞாபகப்படுத்துவதுபோல் இரண்டு தற்காலிக கட்டடங்களை எமது பாவ னைக்கு விட்டுச்சென்றுள்ளது. அத்துடன் ஹாட்லிக் கல்லூரிக்கு நாம் தகுந்தநேரத்தில் கைகொடுத்துதவியது போல், வேலாயுதம் மகாவித்தியாலயத்துக்கும், வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்துக்கும், புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாட சாலைக்கும் இக்கட்டான காலகட்டத்தில் கைகொடுப்பது எங்கள் கடமையெனக்கருதி உதவியும் ஒத்தாசையும் வழங்கினோம், வழங்குகிறோம்.

இன்றுள்ள சூழ்நிலையில் எமது வித்தி யாலயத்தில் ஆய்வுகூட வசதிகளையும், நூல்நிலைய வசதிகளையும் செய்துள்ளோம். பிரார்த்தனை, விளையாட்டு, சாரணியம், மனையியல், விவசாயம் ஆரம்பக்கல்வி போன்றவற்றில் வசதிகளை முழுமையாக ஏற்படுத்த முடியவில்லையேனும், பிள்ளை கள் தம்மை விருத்திசெய்யகூடிய முறையில் எம்மாலான ஒழுங்குகளைச் செய்துள்ளோம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும், பழையமாணவர் சங்கத்தினதும் உதவியை யும், ஒத்தாசையையும் நாடி நிற்கிறோம்.

பாடசாலை பவளவிழாக் கொண்டா டும் இந்நன்னாளில், சைவப்பிள்ளைகளை எண்ணி ஒரு கொட்டிலிற்றானும் பாடசா லையை ஆரம்பித்து வைத்த ஆழ்வார் கண வதிப்பிள்ளை அவர்களையும், எட்டுப்பரப்பு நிலத்தை அன்பளிப்புச்செய்து எம்மை வாழ வைத்த தன்னலமற்ற கணபதியார் சுப்பர் அவர்களையும், பெண் சின்னாச்சிப்பிள்ளை யையும் தன்னலம்கருதாது பாடசாலைக்குக் கட்டடங்களை அமைத்துத்தந்த பே. சின் னத்தம்பி அவர்களையும் கண்ணீர்மல்க நன்றிப்பெருக்குடன் நினைவு கூருகிறோம்.

ஏ. ஜோஷுவ
அதிபர்

30-10-1991.

# உறவுகள்

"கோவில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்." என்பது ஆன்றோர் வாக்கு. நாங்கள் வாழும் புற்றளைக்குப் பெருமை தருவது புற்றளைப் பிள்ளையார் கோவில். அக்கோவிலைச் சூழ உள்ள நிழல் தரும் விருட்சங்கள் போலவே, கல்வி விருட்சம் ஒன்றும் பிள்ளையார் அருளால் 1916ஆம் ஆண்டு தோற்றுவாய் ஆயிற்று. அதுவே செழித்து, தோப்பாகி, கல்வி நிழல் தந்து. இன்று பவளவிழாக் கொண்டாடும் புற்றளை மகாவித்தியாலயம் ஆகும்.

பிள்ளையார் ஆலய மணி புற்றளை மகாவித்தியாலயத்தைச் சுற்றி என்றும் கேட்டபடியே இருக்கும். அந்த ஆன்மீகச் சூழலில் 1938 முதல் 1941 வரை வராத் துப்பளை கலவன் பாடசாலை என வழங்கிய இம்மகாவித்தியாலயத்தில் நான் கல்வி பயின்றேன் ஆரம்பக் கல்வியை மூன்றாம் வகுப்பு வரை எனக்கு ஊட்டி கல்வியில் அத்திவாரமிட்டதே இன்றுள்ள புற்றளை மகாவித்தியாலயந்தான் அத்துடன் விஞ்ஞானக்கல்வி அதிகாரியாக யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகி வந்த நான், முதன் முதற் கடமையாற்றச் சென்ற பாடசாலையும் இதுவே இவ்வகையில் இக்கல்வி நிலையம் என்னுடன் பின்னிப்பிணைந்து உவகை ஊட்டுகின்றது.

பாடசாலை வாழ்வை அசை போடுகிறேன். அந்த இனிய நினைவுகள் இன்பத் தேனாகச் சுவைக்கின்றன. திரு. த. சிதம்பரப்பிள்ளை அவர்கள்தான், தலைமை ஆசிரியர். கரவெட்டியில் இருந்து கட்டை வண்டியிற் பிரயாணம் செய்து வந்து கற்பித்துச் சென்ற சின்னத்தங்கம் சகோதரிகள் நினைவுக்கு வருகின்றார்கள். திருவாளர்கள் முத்துக்குமாரு, க. வைரமுத்து, வல்லிபுரம், க. வேலுப்பிள்ளை, வி. சின்னத்துரை, கிருஷ்ணபிள்ளை, கார்த்திகேசு ஆகியோர் பிற ஆசிரியர்கள்.

யாவரும் திருநீறு. சந்தனம் அணிந்து சைவப் பழங்களாகக் காட்சி தருவார்கள். கல்வியுடன் பக்தி மணம் இழைந்து வீசும். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையேதான் எவ்வளவு பற்றும், பாசமும்! ஆசிரியர்கள் மாணவர்களுக்காகவே வாழ்ந்தார்கள் தம்மை முழுக்க அர்ப்பணித்தார்கள். மாணவர்களும் பயத்துடன் பழகிக் கொண்டதுடன், ஆசிரியர்கள் மேல் நெஞ்சம் நிறைந்த வாஞ்சையுடையவர்களாகவும் இருந்தார்கள்.

குருபூசைகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. பாடசாலை வருடாந்தப் பரிசோதனை நாட்கள், எங்களுக்கு ஒரு புறம் அச்சமும் மறுபுறம் குதூகலமும் தந்தவை. ஏனெனில் அந்நாட்களில் பிள்ளையாருக்கு விஷேச பூசை நடைபெற்று மாணவர்கள் அனைவருக்கும் பிரசாதமும் வழங்கப்பட்டது.

பிள்ளையாரின் அருள் வளையத்துள் அகப்பட்டுக் கொண்டதாற் போலும், புற்றளை மகாவித்தியாலயமும் கருணையுடன் தஞ்சமும், புகலிடமும் அளித்த இடமாக வடமராட்சி மக்களின் நெஞ்சில் நிறைந்துள்ளது. 1987ஆம் ஆண்டு 'ஒப்பரேசன் லிபரேசன்' காலம். மக்கள் இம்மகாவித்தியாலயத்திற் தங்கி ஓரளவு நிம்மதி பெற்றனர். 1985இல் ஹாட்லிக் கல்லூரியையும், புற்றளை மகாவித்தியாலயம் தாராள மனதுடன் இருகை நீட்டி வரவேற்று

தன்னை ஒறுத்து அதனைவாழ, வளர வைத்தது ஹாட்லியும் தன் பழைய பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள மறை முகமான காரணமாயிற்று. புலோலி மெ. மி. த. க. பாடசாலை, வேலாயுதம் மகாவித்தியாலயம் ஆகியனவும் இக்கட்டான காலங்களிற் தஞ்சமடைந்தன. வந்தாரை வாழவைக்கும் நற்பண்பு இக் கல்லூரிக்கு என்றும் கடவுள் ஆசியைப் பெற்றுத் தரும்.

வடமராட்சிக் கல்விக்கோட்டம்


இக்கல்லூரி பவளவிழா கொண்டாடுவது யாவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதாகும் பழைய மாணவன் வகையில் நான் பூரிப்படைகிறேன். என்றும் வடமராட்சிக் கோட்டத்துப் பாடசாலைகளுக்குக் காலமறிந்து செய்த உதவிகளுக்காக பிரதிக் கல்விப்பணிப்பாளர் என்ற வகையில் என்றும் நன்றி செலுத்துகிறேன். ஊருணி போல் இம்மகாவித்தியாலயம் யாவருக்கும் மேலும் பயன் தருவதாக. மேலோங்கி வளர பிள்ளையாரின் ஆசி என்றும் கிட்டுவதாக

ச. செல்லத்துரை
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

□ □ □

ஏழைகட்கு கல்வி ஒரு சொத்து
பணக்காரனுக்கு அது ஒரு பெருமை
இளைஞர்கட்கு அது ஒரு உதவி
வயது முதிர்ந்தவர்களுக்கு அது ஒரு ஆதரவு.

1991ல்...



# நினைவலைகள்

புற்றளை மகா வித்தியாலயம் ஆரம்பித்து எழுபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியானதையிட்டு பாடசாலையும் பழைய மாணவர் சங்கமும் பவளவிழா எடுக்கின்றன. இவ்வேளையில் இப்பாடசாலையில் மூன்று ஆண்டுகள் (1938 - 1940) கல்வி பயின்ற நான் அக்காலப்பகுதியை நினைவு கூர முற்படுகிறேன்.

வராத்துப்பளை சாரதா பீட வித்தியாலயம், வராத்துப்பளை தமிழ்க் கலவன் பாடசாலை என்ற பெயர்களால் அழைக்கப்பட்ட இப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயராக விளங்கியவர் த. சிதம்பரப்பிள்ளை அவர்கள். அவருடனிருந்து சேவையாற்றியவர்களில் எனது நினைவிலிருப்போர் க. க முருகேசபிள்ளை (கார்த்திகேசு உபாத்தியாயர்) க. வேலுப்பிள்ளை, க. வல்லிபுரம், க. முத்துக்குமாரு, வி. சின்னத்துரை, க. வைரமுத்து ஆகியோராகும்.

எனது நினைவலையில் மறக்க முடியாத மூன்று சம்பவங்களைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். இரண்டாம் வகுப்பு ஆசிரியராக எனக்கு அமைந்தவர் கார்த்திகேசு உபாத்தியாயர் ஆவார். மிகவும் கண்டிப்பானவர். இவர் நடக்க முடியாததனால் ஒற்றை மாட்டுத் திருக்கல் வண்டியில் பாடசாலைக்கு வருவார். மனனம் செய்யாத பகுதிகளை மனனம் செய்யாது சென்றால் கண்டிப்பார். ஒரு நாள் நான் மனனம் செய்யாததால் பாடசாலைக்கெனப் புறப்பட்டு நானும் மைத்துனர் ஒருவரும் கணை வைரவர் கோயிலருகில் மறைந்திருந்தோம். இச்செய்தி எனது தந்தையாருக்கு எட்டியது தந்தையார் வந்து என்னைப் பாடசாலைக்குக் கார்த்திகேசு உபாத்தியாயரிடம் அழைத்துச் சென்றார் அங்கே துவரம் தடியால் காலிலும், தொடையிலும் அடிகள் விழுந்தன. கண்டல் ஏற்பட்டு சில நாட்கள் மருந்து கட்டிக் குணப்படுத்தினார். அதன் பின்னர் அவர் வீட்டுக்கும் சென்று படிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இன்னுமொரு மறக்கமுடியாத நிகழ்ச்சி பாடசாலை நண்பகல் உணவு. ஒவ்வொருவருக்கும் சாப்பிடுவதற்குப் பாத்திரம் இருந்தது. சின்னச் சுப்பண்ணனும் சின்ன 'குட்டி அக்காவும் உணவு தயாரிப்பாளர்கள். தெற்குப் பக்கத்திலுள்ள பழைய மண்டபத்தில் நிலத்தில் வரிசையாக இருந்து உண்போம். பருப்பு ஒவ்வொரு நாளும் இருக்கும். சொதி தேவையெனில் சொதியென்று குரலிட்டு கை உயர்த்தியதை மறக்க முடியாது. இரண்டாம் முறையும் சோறு இடும்படி கேட்டபின் விருப்பமாக மனமுவந்து தருவார்.

மூன்றாம் வகுப்பு ஆசிரியர் க. வல்லிபுரம் அவர்கள் விவசாயத்திலும் ஈடுபட்டவர். வீட்டிலும், வயலிலும் கடினமாக உழைத்துவிட்டு வகுப்புக்கு வருவார். காலையில் உற்சாகமாகக் கற்பிப்பார். வெயில் அதிகரிக்க எழுந்து வேலைகளைத் தந்துவிட்டு நித்திரை தூங்கிக் கொண்டிருப்பார். அவரை அழைத்தால் விழிப்பார். பின்பும் தூங்குவார். எனினும் கற்பித்தலில் ஊக்கமுடையவர்.

இவற்றை எழுதியது கற்பித்த ஆசிரியர்களைக் குறை கூறுவதற்கல்ல. இந்நிகழ்ச்சிகள் மறக்கமுடியாதவை. எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்னும் முதுமொழிக்கிணங்க ஆசிரியர்களை நாம் மதிக்கிறோம். அவர்களுக்குரிய இடத்தைக் கொடுக்கிறோம். சிறு பிள்ளையாக இருந்த பொழுது மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தவற்றைத் தந்துள்ளேன். ஆசிரியர்களின் கௌரவத்தை மேன்மையை குறைக்கக் கூடியதாக இருப்பின் வாசித்தும் மறப்பீர்களாக, எழுதிய என்னை மன்னிப்பீர்களாக

தராதரமற்ற ஆசிரியர்களாக இருந்தும் சிறந்த முறையில் கல்வி போதித்தவர்களை நினைவு கூருவதுடன் புற்றளை மகா வித்தியாலயம் எதிர்காலத்தில் சிறந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் முயற்சியாலும், ஒத்துழைப்பாலும் இன்னும் ஓங்கி வளர அருகிலுள்ள புற்றளைச் சித்தி விநாயகப் பெருமான் அருள் புரிவாராக. □

சே. ஏகாம்பரநாதன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சிக் கல்விக் கோட்டம்

# யா/புற்றளை ம. வி. வரலாற்றில் ஒரு பின்னோக்கு

இவ்வித்தியாலயத்தின் பவளவிழாவை முன்னிட்டு வெளிவர இருக்கும் சஞ்சிகை மூலம் எமது காலப்பகுதியில் இவ்வித்தியாலயம் அடைந்த வளர்ச்சியை அறிந்தோர்க்கும் அறியாதோர்க்கும் அறிமுகம் செய்து வைக்க ஒரு வாய்ப்பினை எமக்கு அளித்த வித்தியாலய அதிபருக்கும் ஆசிரிய குழுவினருக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்று 1971 ஆம் ஆண்டு தைமாதம் 1ஆந் திகதி இவ்வித்தியாலயத்தின் அதிபர் பதவியை துடிப்பும் நிர்வாகத்திறனும் கொண்ட அதிபர் திரு. ந. நடராஜா அவரிடம் இருந்து பொறுப்பேற்ற நான் அன்று தொடக்கம் 1987 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26 ஆந்திகதி நான் இளைப்பாறும் வரை தொடர்ந்து 17 வருடங்கள் இவ்வித்தியாலயத்தை வழி நடாத்தும் பாரிய பொறுப்பு என்மேல் சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வித்தியாலயம் சிறு தமிழ்வித்தியாலயத்தில் இருந்து மகா வித்தியாலயமாக 1968 ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது. அதன் முதலாவது அதிபராக கல்வி அறிவினிலும் நிர்வாகத் திறனிலும் தன்னை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத திரு. ந நடராஜா அவர்களை முன்னாள் கல்வி அதிபதி திரு. சி தணிகாசலம் அவர்கள் தெரிந்தெடுத்து நியமித்தார். 1968 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆம் ஆண்டு வரை இவ்வித்தியாலயத்தை எல்லோரும் மெச்சக்கூடிய வகையில் திறம்பட நிர்வாகித்து 1970 ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார். இவரது காலப்பகுதியில் ஜீ. சி ஈ. சாதாரணதரம் புதிதாக நிறுவப்பட்டு ஆசிரியர்களும் பலர் புதிதாக நியமிக்கப்பட்டனர். 1969 ஆம் ஆண்டு முதல் முறையாக ஜீ. சி. ஈ. சாதாரணபரீட்சைக்கு மாணவர் தோற்றினார்கள். 1970 ஆம் ஆண்டு விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு விஞ்ஞான ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

இக்கட்டத்திலேயே யானும் பாடசாலையைப் பொறுப்பேற்க நேர்ந்தது விஞ்ஞான வகுப்புகளுக்கு இரசாயனவியல், பெளதீகவியல், உயிரியல், தாவரவியல் போன்ற பாடங்கள் போதிக்கப்பட்டன. இப்பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டன. கலை, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பித்ததும் மாணவர் தொகை வருடா வருடம் பெருக ஆரம்பித்தது. முன்பு ஒரு சிறு வித்தியாலயமாக இருந்த காரணத்தினால் ஒரு சில வகுப்பறைகள் மாத்திரமே இருந்தன. மகா வித்தியாலய தரத்திற்கு பாடசாலை உயர்த்தப்பட்டதும் பெற்றோர்களின் நன்கொடையினால் 80'×20' கட்டடம் வடமேற்குப் பகுதியில் அமைக்கப்பட்டது.

பின்பும் மாணவரின் இடநெருக்கடி சமாளிக்கமுடியாத நிலையில் 1972ஆம் ஆண்டு அரசாங்கம் ஒரு 60'×20' கட்டத்திற்கு பணம் ஒதுக்கியது. அப்போது இருந்த பாடசாலை அபிவிருத்திச்சபை அக்கட்டடத்தை 100'×20' ஆக மாற்றி தேவையான மிகுதிப்பணத்தைப் பெற்றோரிடம் இருந்தசேர்ப்பதெனத் தீர்மானித்தது அதன் படி உறுப்பினர்கள் வீடு வீடாகச் சென்று பணமாகவும் பனைமரமாகவும் சேர்த்து இக் கட்டடத்தை ஒப்பேற்றி முடித்தார்கள். முதன் முதலாக இக்கட்டிடத் திறப்பு விழா பெற்றோர் தின விழாவாக மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இக்கட்டடம முடிந்தபின் எஞ்சிய பணத்தைக் கொண்டு மாணவர் குடிப்பதற்கு தண்ணீர்க் குழாய்

களும் தண்ணீர்த் தாங்கியும் அமைக்கப் பட்டன.

1972 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டு தோறும் ஒரு கலை விழா அல்லது ஒரு விளையாட்டுப்போட்டி விமரிசையாக கொண்டாடப்பட்டு வந்தது. 973 ஆம் ஆண்டளவில்பாடசாலைக்குத்தென்புறத்தில் உள்ள தோட்ட நிலம் அரசாங்கத்தால் பாடசாலைக்கென சுவீகரிக்கப்பட்டது அப் பொழுது முதல் ஜீ சி.ஈ. சாதாரணதர வகுப் புக்கு விவசாயமும், வர்த்தகமும் ஆரம்பிக்கப் பட்டன. அதற்குரிய ஆசிரியர்கள் ஆரம்பத் தில் வசதிக்கட்டணத்தில் இருந்தும் பின் அரசாங்கத்தாலும் நியமிக்கப்பட்டார்கள். பின்பு படிப்படியாக மனையியல், தையல், சங்கீதம் போன்ற பாடங்களும் பாடவிதா னத்தில் சேர்க்கப்பட்டன.

இதனால் மாணவர் தொகை சிறிது சிறிதாக அதிகரிக்கவே இடநெருக்கடி மேலும் வலுவடைந்தது. அரசாங்கத்தின் உதவியுடன் வடக்குப்பக்கமாக உள்ள கட்ட டம் [ இப்போது உள்ள அதிபர் அலுவலகம் உட்பட ] அமைக்கப்பட்டது. இக்கட்டட வேலை முடிவுற்றதும் அக்கட்டத்தின் மிகு திப் பொருளைக் கொண்டு செத்தைவேலி யாக இருந்த பாடசாலையின் முகப்புவேலி மதிற்சுவராக மாற்றி அமைக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் பாடசாலை N. C G.E. பரீட்சைப்பெறுபேறுகளின் அடிப்படை யில் எமது பாடசாலையில் H.N.C.E. வகுப் புக்கள் அரசாங்கத்தினால் நிற்பாட்டப் பட்டபோது G. C E. (A/L) விஞ்ஞான வகுப்புக்கள் எமது பாடசாலையில் தொடர்ந்து நடைபெற்றன.

இவ்வகுப்புகள் நடைபெற்றபோது வகுப் புக்கள் நடாத்த போதிய இடவசதி இல் லாது இருந்ததையும் பெற்றோர்க்குச் சுட்டிக் காட்டப்பட்டது. இதை செவிமடுத்த பெற் றோரில் பெரும் சைவத் தொண்டரும்,

D

கொடை வள்ளலும் சமூகத் தொண்டருமாக இருந்த எமது சிறிய தந்தையார் உயர் திரு பே சின்னத்தம்பி அவர்கள் தனது சொந்த செலவிலும் தமது சொந்த மேற்பார்வையி லும் அல்லும் பகலும் அதே முயற்சியாக நின்று 20'×10' அறை ஒன்றும், 20'×20' மேடை ஒன்றும் உள்ளடக்கிய 100'×20' கட்டடம் ஒன்றைக் கட்டுவித்துப் பாட சாலைக்கு அன்பளிப்புச் செய்தார். இக்கட்ட டத் திறப்புவிழா ஒரு மாபெரும் பெற்றோர் தின விழாவாக உருவெடுத்து, முன்னைநாள் கல்விப்பணிப்பாளர் திரு. தி.மாணிக்கவாசகர் அவர்கள் பிரதம விருந்தினராக வருகைதந்து பெரியதோர் பாராட்டு விழாவாக முடிவுற் றது. எமது ஊர்ப்பிள்ளைகள் காலம் கால மாக இருந்து படிப்பதற்கு ஒரு நிரந்தரக் கட்டடத்தைப் பெருஞ்செலவில் நிறுவித்தந்த கொடை வள்ளல் உயர் திரு. பே. சின்னத் தம்பி அவர்களை எல்லோரும் நினைவு கூருவர்.

தொடர்ந்து பாடசாலை விளையாட் டுப் போட்டிகள், விவசாயப் போட்டிகள், பேச்சு, எழுத்துப் போட்டிகளிலும் பங்கு பற்றிச் சாதனைகளை நிலைநாட்டியது. பாடசாலையின் தரம் உயர மாணவர் தொகையும் உயர, பாடசாலையின் தென்பகுகுதியில் உள்ள மேல்மாடிக் கட்டடமும், அரசாங்க உதவியோடு அமைக்கப்பட்டது அக்காலகட்டத்தில் பாட சாலையின் தென்பகுதியில் மதிற்சுவரும் அமைக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் உயர்தர வகுப்புக் கள் கற்பிக்கும் விஞ்ஞான ஆசிரியர்களின் பற்றாக்குறையினால் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட உயர்தர வகுப்புக்களைத் தற்காலிக மாக இடைநிறுத்தும்படி அரசினால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன் விளைவாக எமது பாடசாலையில் நடைபெற்று வந்த உயர் விஞ்ஞான வகுப்புக்கள் இடை நிறுத்தப்பட் டன. அதன் விளைவாக 9ஆம், 10ஆம் மாணவர் தொகை வீழ்ச்சி அடைந்தது.

பின்பு நாட்டு நிலைமை காரணமாக பருத்தித்துறைப் பகுதியில் இயங்கி வந்த ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரகல்லூரி போன்றவை அங்கு இயங்க முடியாது போகவே ஹாட்லிக் கல்லூரி எமது பாடசாலையின் தென்பகுதியில் இயங்குவதற்கு ஒழுங்குகள் நடைபெற்றன. அவர்களை அன்புடன் வரவேற்று ஓரே வளவில் இரு பாடசாலைகளும் எதுவித பிரச்சனையும் இன்றித் தொடர்ந்து நான்கு வருடங்கள் நடைபெற்று வந்தன.

இக்காலகட்டத்தில் 1987 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 26ஆம் திகதி எனக்கு 60வயது பூர்த்தியானமையால் அறிவும் ஆற்றலும் நிர்வாகத்திறனும் கொண்ட தற்போதைய அதிபர் திரு. எ. ஜோஷுவ அவர்களிடம் பாடசாலை நிர்வாகத்தைப் பொறுப்பளித்து விடைபெற்றேன். விடைபெற்றுப் போகும் போது இரு கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் அனைவரும் அன்போடு எமக்குப் பிரிவுபசார வைபவங்கள் வைத்து விடை அளித்தார்கள்.

யா / புற்றளை ம. வி. இல் எனது 17 வருட வாழ்க்கையில் எம்மோடு உடனிருந்து எமது வேலையையும் பாடசாலை வேலைகளையும் திறம்பட நடாத்துவதற்கு அல்லும் பகலும் அயராது உழைத்த ஆசிரியர், மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் இச்சஞ்சிகை மூலம் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகின்றேன். □

சி. தர்மலிங்கம்
முன்னாள் அதிபர்
யா / புற்றளை ம. வி.

09-01-1992

ஓர் ஆணைப் படிக்க வைத்தால்
ஒருவரைப் படிக்க வைத்தது போலத்தான் ஆகும்.
ஆனால் ஒரு பெண்ணைப் படிக்க வைத்தால்
ஒரு குடும்பத்தையே படிக்க வைத்ததுபோல் ஆகும்.

—டாக்டர் திவர்.

# நெஞ்சிலே நிற்கும் நினைவுகள் சில

இற்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன்னர் புற்றளைச் சாரதா பீட வித்தியாசாலை என்று அழைக்கப்பட்ட பாடசாலை தொடர்பான நினைவுகளை முழுமையாக என்னால் கூறமுடியவில்லை. கால வெள்ளத்திலே பல நினைவுகள் கரைந்து போய் விட்டன எஞ்சியுள்ள சில நினைவுகளை அசைபோட்டு, மீட்பதிலே தான் மகிழ்ச்சியடைகின்றேன். எனது பள்ளிப் பருவப் பாடசாலை நினைவுகளை இத்தனை ஆண்டுகள் கழித்து எழுதுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துகின்றேன்

பாடசாலையின் தலைமை ஆசிரியராகக் கற்கோவளம் என்னும் ஊரைச் சேர்ந்த திரு அருணாசலம் என்பவர் கடமை ஆற்றினார். அவருக்கு உதவியாக திரு கார்த்திகேசு, திரு. முருகேசு ஆகியோர் கடமை ஆற்றியதை என்னால் நினைவுகொள்ள முடிகிறது. காலையில் எல்லா மாணவர்களும் திருநீறு அணிந்திருக்கிறார்களா என்று கார்த்திகேசு வாத்தியார் பார்வை இடுவார் சமய வழிபாடுகளுக்கு அவரே பொறுப்பாவார். பாடசாலை தொடங்கும் போது தேவாரத்தோடு தொடங்கப்படும் பின்பு சைவ வினாவிடை கற்பிக்கப்படும். பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம், நிகண்டு நன்னூல், நைடதம்முதலியன கற்பிக்கப்படும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பனையோலையில் எழுத்தாணியால். தேவாரம் எழுதப்பட்டுப் பாடமாக்கப்படும். அருகே உள்ள பிள்ளையார் கோவிலில் திருவிழா நடைபெறும் பொழுது உலாவரும் சுவாமிக்குப் பின்னால் மேல்வகுப்பு மாணவர்கள் திருமுறை பாடிச் செல்வார்கள். திரு. அருணாசலத்தின் பின் திகிரியைச்சேர்ந்த சின்னையா சட்டம்பியார் தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றினார்.

பாடசாலை சிலுவை வடிவத்தில் அமைந்திருந்தது பாடசாலையின் மேற்குப் புறமாக தோட்ட நிலத்தில் மிளகாய் பயிரிடுவார்கள். கற்கோவளம், வராத்துப்பளை, திகிரி, புற்றளை முதலிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் மேல்வகுப்பு கற்பதற்கு இப்பாடசாலைக்கு வந்தார்கள் இருநூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றார்கள்.

நீண்டகாலமாகி விட்டதால் நெஞ்சிலே நினைவுகள் தடுமாறுகின்றன. எனினும் நெஞ்சிலே நிலைத்திருந்த நினைவுகள் சில வற்றைக் கூறியுள்ளேன். எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவுபெற்றுப் பாடசாலை பவளவிழா கொண்டாடுவதைப் பார்த்து மகிழ என்னையும் இருக்க வைத்த இறைவனுக்கு மீண்டும் நன்றி செலுத்திப் பாடசாலை நீடூழி வாழ்க என்று வாழ்த்தி நிற்கின்றேன்.

வே. தம்பிஐயா
முன்னாள் ஆசிரியர்

# பற்பல ஆண்டுகள் முன்னர்....

புற்றளை சாரதா பீட வித்தியாசாலை 1916ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக இப்பாடசாலை தோன்றியதெனக் கூறலாம். முதலாவது தலைமை ஆசிரியராகக் கற்கோவளத்தைச் சேர்ந்த திரு. அருணாசலம் கடமை புரிந்தார். திரு. கந்த முருகேசனார், திரு. கணபதிப்பிள்ளை, முருகேசு (கார்த்திகேசு), திரு. க. தம்பையா ஆகியோர் உதவி ஆசிரியர்களாக இருந்தார்கள். திரு. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்தது என் நினைவில் வருகின்றது. பிற்காலத்தில் தமிழ் கூறும் நல்லுலகத்திலே தமிழ் அறிஞர் திருகந்தமுருகேசனார் என்று பெயர் பெற்ற திரு. க முருகேசு கல்வி கற்பித்ததையும் நினைவிலே வைத்துள்ளேன் 1934ஆம் ஆண்டளவில் திரு. கந்த முருகேசனார் வாதநோய் காரணமாக இப்பாடசாலைச் சேவையிலிருந்து விலகினார். திரு. க. தம்பையா அவர்கள் மேல் வகுப்புகளில் சகல பாடங்களையும் கற்பித்து வந்தார். அவரிடம் கற்ற மாணாக்கர்கள் பலர் அரசாங்கப் பரீட்சைகளில் திறமையாகச் சித்தியடைந்தனர். அதனால் அயற்கிராமங்களைச் சேர்ந்த பிள்ளைகள் பலர் இப்பாடசாலைக்கு வந்து கல்விகற்றார்கள். திரு. தம்பையா அவர்கள் ஆங்கிலத்திலுள்ள கணிதம், பூமிசாஸ்திரம் ஆகிய பாடங்களை மொழி பெயர்த்துக் கற்பித்தார். திரு. கார்த்திகேசு வாத்தியார் சமய அறிவு மிக்கவர், கந்தபுராணஉரை, திருவாதவூரர் புராணஉரை, திருவிளையாடற் புராணஉரை முதலியவற்றை மாணவர்களுக்குக் கற்பித்து வந்தார். அக்காலத்தில் புராணபடணம் செய்யும்பொருட்டு அவரைப் பல கோவில்களுக்கும் அழைத்துச்செல்வார்கள். அவருடைய உரையைக் கேட்பதற்கென்று மக்கள் கூடுவது வழக்கம்.

திரு. கந்த முருகேசனாரிடம் தமிழ் கற்றவர்கள் பலர் பிற்காலத்தில் பண்டிதராகவும், வித்துவானாகவும் பட்டம் பெற்றார்கள் பட்டம் ஏதுமில்லாத ஆசானான அவர் பட்டம் பல பெற்ற சீடருக்குக் குருவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் ஆரம்பகாலத்தில் மனேச்சராக இருந்தவர் திரு.சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் ஆவார். பின்பு திரு. வேலாயுதபிள்ளை அருணாசலம் இப்பதவியை வகித்தார். இன்று இதெல்லாம் பழைய கதை. எனினும் ரிஷிமூலம், நதி மூலம் போல பாடசாலை மூலமும் முக்கியமானது. வேரில்லையென்றால் விருட்சமில்லை இன்று ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரோடி வளமாக வளர்ந்து நிற்கும் பாடசாலையை எண்ணி நான் பெருமையடைகின்றேன். அதன் வளர்ச்சியில் எளியோனாகிய எனக்கும் ஒரு பங்குண்டென்பதை நினைத்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று பவளவிழாக் கொண்டாடும் பாடசாலை இன்றுபோல் என்றும் வாழ்க.

— நாகலிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

□ □ □

# பவளவிழாக் காணும் புற்றளை மகாவித்தியாலயம்

புலோலி (புலவர்—ஒலி) என்பது எமது ஊர். எமது புலோலியில் மாமரத்தடியில் புற்றளை (புற்று - அளை)யில் வீற்றிருக்கும் அருள்மிரு சித்திவிநாயகப் பெருமானின் சந்நிதானத்திலே அமைந்திருக்கும் புற்றளை மகாவித்தியாலயம் வெள்ளி, பொன், வைர விழா ஒன்றும் காணாமல் கன்னி விழாவாகக் காணும் பவளவிழாவையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம். சாரதா பீட வித்தியா சாலையாகத் தொடங்கி வரத்துப்பளை கலவன் பாடசாலையாக மாறி தற்போது புற்றளை மகாவித்தியாலயமாக வீறுநடை போடுகின்றது மிக விரைவில் இன்னுமொரு உன்னத அந்தஸ்தைப் பெறும் என்பதில் இரண்டு அபிப்பிராயங்கள் இருக்க இடமில்லை.

ஆங்கிலம் மூலம் கல்விபயின்ற காலத்தில் மாணவர்களது தரம் மிகவும் உன்னத நிலையில் இருந்ததை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் தற்போது தமிழ்மொழி மூலம் கல்விபயிலும் நிலையில் தமிழ் அறிவு மாணவர்களிடம் குறைவு என்பதை கல்வியைத் தானம் செய்யும் ஆசிரியர்களே மறுக்க மாட்டார்கள். இந்த நிலைக்குக் காரணம் என்ன? ஆய்வு தான் பதில் சொல்ல வேண்டும். எது எப்படி இருந்தாலும் தாய் மொழியைக் கசடறக் கற்க ஆவன செய்து உற்சாகமூட்டவேண்டும்.

புற்றளை மகாவித்தியாலயத்தில் இளமைப் பராயத்தில் கல்விகற்ற பின் 3ஆம் 5ஆம் வகுப்புக்களின்பின் ஹாட்லிக் கல்லூரி, வடஇந்து கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, வேலாயுதம் மகாவித்தியாலயம் போன்றவற்றிற்கு உயர்கல்வி நிமித்தம் மாறிப் போகின்றார்கள். இந்த நிலைமையை மாற்றி அமைக்க ஆவன செய்யப் பெற்றோரும் ஒத்துழைப்பார்களேயானால் பழைய மாணவர்கள் சங்கம் தம்மால் ஆனமட்டும் செயல்படும். ஆனால் இதை முழுமைப் படுத்தக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைத் தந்துதவினால் குறித்த இலக்கை அடைவது கடினமான காரியம்ஒன்றல்ல

மேற் குறிப்பிட்ட கோணங்களில் இருந்து ஒத்துழைப்புக் கிடைக்குமானால் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே மிகச் சிறந்த கல்லூரியாக விளங்க இடமில்லாமல் இல்லை. ஏனெனில் புற்றளை, புலோலி மூளைவளம், கல்விவளம், பொருந்திய மண்ணைக் கொண்டது.

பவளவிழாக் காணும் புற்றளை மகாவித்தியாலயத்திற்கு பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் மனமுவந்த ஆசிகள்.

த. கதிர்காமநாதன்
தலைவர்
புற்றளை மகாவித்தியாலய
பழைய மாணவர் சங்கம்

# பவள விழாவும் நாமும்

பாடசாலை அபிவிருத்திச்சபை பொதுக்கூட்டம் நடைபெற்றபோது அதிபர் தமதுரையில் பாடசாலை தொடங்கி 75 ஆண்டுகள் முடிவடைய இருப்பதையும் பழைய மாணவர் மன்றம் அமைத்து அதன் மூலம் நல்ல பல வேலைகளை செய்யமுடியும் என்பதையும் குறிப்பிட்டார். பொதுக்குழு தொடர்ந்தபோது இதுபற்றி ஆராய்ந்து இவ்வாண்டு பவளவிழாவையும் அதனோடு சேர்த்து பரிசளிப்பு நிகழ்வையும் நடாத்த உறுதி பூண்டது பழைய மாணவர் மன்றத்தை உருவாக்க வேண்டி உபகுழு ஒன்றையும் தெரிவு செய்தது. அதற்கான ஆரம்பச் செலவுகளை அபிவிருத்திச்சபையே ஏற்பது எனவும் தீர்மானம் இயற்றியது. தொடர்ந்து வந்த செயற்குழு கூட்டங்களில் இரண்டு விடயங்கள் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 23 6.91 அன்று பழைய மாணவர் மன்ற தொடக்க விழா நடைபெற்றது. அமைப்புத்திட்டத்தின் படி பொதுக்கூட்டம் அழைக்கப்பட்டு இங்கும் பவளவிழா, பரிசளிப்பு நிகழ்வு பற்றி ஆராயப்பட்டது.

இந்நிலையில் அபிவிருத்திச்சபை, பழைய மாணவர் மன்றம் இரண்டினதும் செயற்குழுக்கள் இணைந்து செயல்பட்டன. இதற்கென செலவின உத்தேச மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. விழா நினைவு மலர் ஒன்றை வெளியிடவும் நல்ல கருத்தொன்று தோன்றிற்று. நிதி சேகரிக்கும் பணிக்கு ஆசிரியர் குழுவும் சேர்ந்து கொண்டது 8 குழுக்கள் இதற்கென இயங்கி செயல்பட்டு எதிர்பார்த்ததைவிட வேகமாகவும் திருப்தியாகவும் செயல்பட்டன. பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நன்மனம் படைத்த பண்பாளர், ஆசிரியர்கள் பொற்குவையாய் அள்ளித் தந்தனர். வருங்காலத்திலும் பாடசாலையின் நூல் நிலையம், விளையாட்டுத்துறை போன்ற இணைந்த கல்வியை வளர்க்க மனம் உவந்து உதவி செய்யவேண்டி நிற்கிறோம்.

நினைவு மலர் தயாரிக்க ஆசிச் செய்திகள், கவிதைகள், கதை போன்றவற்றை தந்துதவிய அனைத்து பெருமக்களும் எமது நன்றிக்கு உரியவர்கள்!

பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இவற்றை மதிப்பீடு செய்து பரிசிற்கான தெரிவுகளை செய்து தந்த ஆசிரியர்களும் ஒன்றிணைந்து உழைத்த மாணவர்களும் எமது பாராட்டிற்கு உரியவர்கள். தவிர பவளவிழாவிற்கு இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளை தயாரித்து பயிற்றி மேடையேற்றிய அனைத்து ஆசான்களும் போற்றுதற்குரியவர்கள்.

பவளவிழா, பரிசளிப்பு நிகழ்வு, நினைவுமலர் வெளியீடு ஆகிய இம்மூன்றையும் செவ்வனே செய்து முடித்திட ஒன்றுபட்டு உழைத்த அனைத்து பெருமக்களும் போற்றுதலுக்கும் பாராட்டுகளுக்கும் உரியவர்கள் □

''கல்வி அழகே அழகு''

வ. செல்வராஜன்
செயலாளர்

பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் மன்றம்

# வடமராட்சியின் கல்விப்பாரம்பரியத்தில் எமது பாடசாலையின் பங்கும் பணியும்

வடமராட்சிப் பிரதேசத்திற்கு நீண்டதோர் கல்விப் பாரம்பரியம் உண்டென்பது யாவரும் அறிந்த உண்மையாகும். வடமராட்சிப் பிரதேசம் பல கிராமங்களை தன்னகத்தே கொண்டது. அவற்றுள் பல காரணங்களால் குறிப்பிட்டுக் கூறக்கூடிய கிராமம் புற்றளை ஆகும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கிராமம் புற்றளை. கி. பி. 1344 இல் ஈழத்துக்கு வந்த இபுன் பக்தூதாவின் கூற்றுப்படி ஆரியச் சக்கரவர்த்தியின் தலைநகரம் 'புத்தல' என்பதாகும். பேராசிரியர் கணபதிப் பிள்ளை அவர்கள் 'புத்தல' என்பது பலர் குறிப்பிடுவது போல் புத்தளம் அல்ல, வடமராட்சியில் உள்ள புற்றளை என்ற கிராமமே என்பார். ''புத்தல என்பது புத்தளமாக இருக்க முடியாது. சிங்கை நகர் எனக் கூறப்படும் வல்லிபுரக் குறிச்சிக்கு அணித்தாகவுள்ள புற்றளை என இப்போது வழங்கும் கிராமமே இப் புத்தலவாக இருக்க வேண்டும். மேலும் இவ்வரச பரம்பரையினரைச் சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் எனவும் குறிப்பர். புற்றளை சிங்கையின் ஒரு பகுதி. சிங்கை என்னும் பகுதி கி. பி. மூன்றாம் நூற்றாண்டளவில் கீர்த்தி வாய்ந்த இடமாக இருந்தது. இதற்குச் சான்று வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட பொன்னேட்டுச் சாசனம். அன்றியும் அங்கு பல கட்டிடங்களும் கோட்டைகொத்தளங்களும் அழிந்தொழிந்து மண்ணால் மூடப்பட்டிருப்பதை அங்கு செல்வோர் இன்றும் காணலாம்'' என்பது அன்னாரின் கூற்றாகும். ஆகவே வரலாற்றுப் பழஞ் சிறப்பு வாய்ந்த ஒரு கிராமத்தின் பின்னணியில் கல்விப் பாரம்பரியத்தின் அங்கம் முன்னணியில் நிற்கும் வாய்ப்புண்டல்லவா.

குருகுல முறையிலான திண்ணைக் கல்வி மரபு முதல் இன்றைய ஐரோப்பிய தொடர்பிலான பாடசாலை கல்வி மரபு வரை தொடர்பறாத தனித்துவ முன்னணியில் புற்றளையின் கல்விப் பாரம்பரியம் இருந்து வருகின்றது என்றால் அது மிகையாகாது இன்று பவளவிழாக் காணும் புற்றளை மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்றவர்கள் - கல்விக்கண் திறக்கப் பட்டவர்கள் — பல்வேறு துறைகளில் விற்பன்னர்களாக இன்று விளங்குகின்றார்கள்.

புற்றளை போன்ற இன்னும் சில கிராமங்களை அடக்கிய பிரதேசமே புலோலியூராகும். புலவர்களின் ஒலி இடையறா ஒலிப்பதனால் 'புலோலி' என்னும் பெயர் வழங்கலாயிற்று என்பர். காலத்துக்குக் காலம் இலக்கிய அறிஞர்கள் தோன்றி வாழ்ந்திருக்கிறார்கள், வாழ்ந்து வருகிறார்கள். இலக்கிய ஆசானாக பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு இலக்கிய அறிவூட்டிய கந்த முருகேசனாருக்கும் எமது பாடசாலைக்கும் உள்ள அத்தியந்த உறவு மகத்தானதாகும். தமிழ்ப் பேரறிஞர் தென்புலோலியூர் கணபதிப்பிள்ளையின் தந்தையாரும் 'கார்த்திகேய வாத்தியார்' என்று அழைக்கப்பட்டவருமான திரு. ச. முருகேசபிள்ளை புற்றளைப் பாடசாலையில் மாணவர்களுக்கும், திண்ணைப் பள்ளிக்கூடத்தில் குருகுல முறையில் வளர்ந்தோர்க்கும் சைவசமய அறிவை அள்ளி வழங்கினார். கந்தபுராணம் எமது பாடசாலையில் கருவுற்று புராணப்படலமாக புற்றளைப் பிள்ளையார் கோயிலில்

பிரசவித்தது. எமது பாடசாலையில் அரிச் சுவடி கற்றவர்கள் கவிஞர்கள், கட்டுரை யாசிரியர்களாக கதாசிரியர்களாக பரிணமித் துள்ளனர். ஆராய்ச்சிக் கட்டுரை நூலுக் காக சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, நாவல் இலக்கியத்திற்கு இரண்டு தடவை சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற இக்கட்டுரை ஆசிரி யர் ஆகியோரை எமது பாடசாலை உரு வாக்கியது என்பது பெருமையுடன் குறிப் பிடவேண்டியதொன்றாகும்.

திறமைமிக்க ஆசிரியர்களாக, வைத் திய கலாநிதிகளாக, பொறியியலாளர்க ளாக, கணக்காளர்களாக, இன்னும் பல துறைகளில் முன்னணியில் துலங்கி வருபவர் கள் புற்றளை மகாவித்தியாலயம் வளர்த் தெடுத்த செல்வங்களாகும். இன்று கடல் கடந்தும் இச்செல்வங்களின் திறமை கலங் கரை விளக்கமாக ஒளி வீசுகின்றது.

விவேகம், விடாமுயற்சி, எதிலும் சிரத்தை, தொழிலில் நாணயம், எடுத்த கருமத்தை உரியநேரத்தில் நிறைவு செய்யும் கடமையுணர்வு இன்னும் பல நற்பண்புகள் எமது பாடசாலை பழைய மாணவர்களிடம் பொதுவாக இருப்பதை மேலதிகாரிகளா லும் சகஊழியர்களாலும் போற்றப்பட்ட நிகழ்வுகள் பல உண்டு.

வடமராட்சிப் பாரம்பரியத்தினுள் புற்றளை வாழ்மக்களின் பண்பாட்டு அசைவு இயக்கம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை மேற்குறிப்பிட்ட சுருந்து விளக்கம் உறுதிப் படுத்துகிறது.

வடமராட்சிப் பிரதேசத்தின் கல்விப் பாரம்பரியத்தின் பெருந்தூணாக – கல்வி பயில் களமாக – புற்றளை மகாவித்தியால யம் கம்பீரமாக நிற்கின்றது. □

வாழ்க! வளர்க அதன் பண்பும் பணியும்!

— புலோலியூர் க. சதாசிவம்

□ □ □

*திறமையின் தலைவனே அறிவைப் பெற்று நீ செல்வனாக இருந்தால் உன்னிடம் உள்ள கல்வி செல்வத்துடன் சேரும். நீ ஏழை யாக இருந்தால் உன்னை வாழவைக்கும்.*

# எங்கள் கல்வித்தாய்

எனக்குக் கல்வித்தாய்புற்றளைப்பள்ளி. எனக்கு மட்டுமன்று; தென்புலோலிச் சிற்றூரில் வாழும் பலருக்கும் இவளே கல்வித் தாய்! நான் அறிய, மூன்று தலைமுறையினர் இங்கே கல்வி கற்றிருக்கிறார்கள். என்னைப் பெற்ற தாயும் இங்கே பயின்றாராம்! என்பிள்ளைகளும் இங்கே கற்றார்கள் தலைமுறை தலைமுறையாக மக்களுக்குக் கல்வி ஊட்டி வளர்க்கும் இவள், தோன்றியது 1916 இல் என்கிறார்கள்.

மக்களை மக்கட் பண்புடையவர்களாக்குவதும் அவர்களது அறிவு விழியைத் திறந்து வைத்து வழிகாட்டி வாழவைப்பதும் கல்வியே என்பது முடிந்த முடிபாகும். கல்வியில்லாதவர் விலங்குகட்குச் சமமாவர் என்று வான் புகழ் வள்ளுவன் கூறியுள்ளான்,

"விலங்கொடு மக்கள் அனையர்
இலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்"

— பள்ளிக்கூடம் என்பது அதன் கட்டடங்கள் அன்று; அங்குக் கற்பித்த — கற்பிக்கும் ஆசிரியர்களையே சிறப்பாகக் கருதும். புற்றளைப் பள்ளியிலே அதன் தொடக்க காலத்தில் கற்பித்த ஆசிரியர்களின் கடமையுணர்வு, அறிவு, திறமை, மனப்பாங்குகள் பற்றி சிறப்பாகப் புகழ்ந்து மூத்தோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவ்வாசிரியர்களில் பலரும் எனக்கும் ஆசிரியர்களாய் இருந்தார்கள் என்பதில் அளவிலா மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

அவர்களில் என் நினைவில் நின்ற சிலரை இங்கு குறிக்கிறேன்; ஏனைய ஆசிரியப் பெருமக்கள் என்னை மன்னிப்பார்களாக, திருவாளர் தம்பையா, திருவாளர் முருகேசபிள்ளை (கார்த்திகேசு வாத்தியார்) தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார், திருவாளர்கள் வல்லிபுரம், வேலுப்பிள்ளை, கிருட்டினபிள்ளை, சின்னத்துரை, சிதம்பரப்பிள்ளை (தலைமையாசிரியர்), வைரமுத்து ஆகியோர் அப்பொழுது கற்பித்தார்கள். இவர்களில் ஒரே பெயரில் வேலுப்பிள்ளை, சின்னத்துரை என இவ்விருவர் இருந்தனர்; அவர்கள் பழம். புது எனும் அடைமொழிகளால் வேறுபடுத்தப்பட்டு வழங்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் இதே சிற்றூரைச் சேர்ந்தவர்களே. வேற்றூரில் இருந்து வந்து இங்குப் பணிபுரிந்தவர்களும் உண்டாம்.

தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார், புற்றளைப் பள்ளியில் என்னைக் கற்பியாது விட்டாலும் அவருடைய வீட்டிலிருந்த திண்ணைப் பள்ளியிலே என்னைக் கற்பித்தவர், தமிழ்க் கல்வியில் என்னைப் பண்டிதன் ஆக்கியவர்.

இங்கே மொத்தம் எட்டரை ஆண்டுகள் யானும் கற்பித்திருக்கிறேன். இப்பள்ளியின் தொடக்க காலத்திலிருந்து பவளவிழாக் காணும் இன்றுவரையுள்ள வரலாறு விளக்கமாக முழுமையாக இம்மலரில் வெளிவருதல் வேண்டும் என்பது எனது வேணவா!

திருவாளர் தம்பையா (புற்றளை) ஆசிரியரின் கல்விப்பணியை — கடமை உணர்வைப் பற்றி எனக்குத் தமிழாசானாய் விளங்கிய தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் புகழ்ந்துரைப்பதை நேரிலேயே கேட்டுள்ளேன். அவற்றை எல்லாம் இங்கு விரித்துரைக்க முடியவில்லை. இங்குக் கல்வி கற்று நன்நிலையில் — மேனிலையில் வாழும் பெரியோர்கள் மிகப்பலராவர்.

கல்வி மன்றங்கள் நாட்டின் கண்கள் என்றால் மிகையில்லை. அங்கேதான் மக்

களின் நலவாழ்வுக்கு உரிய அடிப்படை இடப்படுகிறது; மக்களின் அறிவு ஒழுக்கம் ஆகியவையும் இனத்தின் மொழி — கலை — பண்பாடுகளும் பேணி வளர்க்கப்படுகின்றன. இத்தகைய உயர் விழுமியங்களின் காப்பிடங்களாக விளங்கும் கல்வி மன்றங்களையும் அவற்றை சிறப்புற இயக்கி வரும் ஆசிரியர்களையும் மன்பதை உச்சிமேல் வைத்துப் போற்றும் என்பதில் ஐயமில்லை.

" எண்ணென்ப ஏனை எழுத்தென்ப
இவ் விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு "

" எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் "

" எழுத்தறிவித்தவன் இறைவனாவான் "

" அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறிவித்தல் "

என்றெல்லாம் செந்நாப் புலவர்கள் — சான்றோர்கள் புகழுரைக்கு இலக்காகி மிளிர்பவை கல்வி மன்றங்கள் அல்லவோ? எனவே, யானும் கல்வித் தாயாம் புற்றளைப் பள்ளியை, அவள் எண்ணில் பல்லாண்டு வாழ வாழ்த்துவேன்.

கல்விப்பா லூட்டிக் கசடென் களிசீறி
நல்ல நடைபயிற்றி நாவிருந்து — பல்லோர்
அவையில் உரைக்க அருள்செய்த தாயை
நவையற வாழ்த்துகிறேன் நான். □

அன்பன்,
பண்டிதர் வீ. பரந்தாமன்

" தமிழ்வளர் சோலை "
தென் புலோலி,
புலோலி
01–01–1992

□ □ □

இதயமே சிறந்த உபதேசி;
காலமே சிறந்த ஆசிரியன்;
உலகமே சிறந்த அறிவு நூல்;
கடவுளே சிறந்த நண்பன்.

# வாழ்கவென வாழ்த்திடுவோம்!

புலோலி வே. ஆறுமுகம்

கொற்றவரின் சீரணைப்பில் கோலமுற அவைவளர்ந்த
நற்றமிழைக் கற்றதனால் நன்மதிப்பு பெறுவதற்கு
சொற்றொடரில் சிறப்புமிகு சீரமையக் கவிபுனைய
கற்றாசா னல்லநான்; கரங்குவித்துச் செப்புகிறேன்.

சிற்றிடையாள் கலைவாணி சீருறவென் செந்நாவில்
பற்றுறவே வந்துறைந்து பண்ணமைய பொருள்செறிய
குற்றமற்ற கரும்பனைய குறுமுனியின் செந்தமிழில்
அற்புதமாய்ப் பதஞ்சேர்த்து அரியசுவை மிகைக்க
புற்றளைப் பள்ளிய நன் புனிதப்பணி வியந்து
கற்றவரின் மரபினிலே கவிதையொன்று தருகவென்றாள்

பொற்றொடியின் பணியேற்று புனிததீந் தமிழ் மொழியில்
நற்றவத்தால் நல்லாள் நவின்ற திருப்பணியை
பற்றிய எழுத்தாணி பாதியிலே தரிக்காது
உற்றபடி நிகழ்வுகளை உள்ளபடி வரைந்திடுவேன்.

உரைநடையில் பொறித்தவற்றை ஊரறியக் கவிதையென
வரையறுத் க் கூறும் வழக்க மெனக்கில்லை
மாப்புலவர் செந்தமிழில் மாண்புறப்பா வியற்றுதற்கு
யாப்புநெறி வகுத்து யாணுறவே அளித்ததனால்,
அன்னாரின் வழியேகி அழகான செந்தமிழில்
பொன்னான தமிழெழுத்தில் புனைகின்றேன் கவிதையினை
கற்றோரின் பேரரங்கில் கவிதையென ஏற்றிட்டால்
வெற்றிகண் டிம்மையிலே வேறின்பம் வேண்டிலன்யான்.

கற்றோர்கள் உதித்துறையும் களங்கமிலா புலோலியிலே
உற்றாரும் உறவினரும் ஒருங்கிணைந்த சிந்தனையில்
பொற்புநிறை பதியாய் பொலிகின்ற புற்றளையில்
சிற்ப நூற்றிறனில் சிங்காரமாய்த் திகழும்
கற்பகக் கணபதியின் கலையொலிக்கும் ஆலயத்தின்
உத்தர கோடியிலே உயர்ந்த கலைபுகட்டும்
வித்தி யாலயத்தை வித்தகமாய் அமைத்துவிட்டார்.

கந்தமுருகேசன் காலத்தி லுதித்த பள்ளி
அந்த நாள்முதலாய் அரியநற் கலையை
நாற்றிசையும் மக்கள் நயமுறவே பாராட்டி
ஏற்றி உயர்வூட்டி எழிலுறவே மனமார
போற்றிப் புகழ்ந்தமையால் பாலகரும் ஏனையரும்.
ஊற்றெடுத்துக் கடல்சேரும் ஊரல் அருவியைப்போல்
மருங்கமையும் பதியிருந்தும் மகத்தான நகரிருந்தும்
அருங்கலையைக் கற்க அலையலையாய் இணைந்திடுவார்.

பல்கலைக் கழகத்தில் பண்டை இலக்கியத்து
கல்விக் கலையுடனே கணக்கியலைக் கற்றவரும்
அந்நியர் மொழியான ஆங்கிலத்தைக் கற்றவரும்
நன்னெறியில் ஒழுகும் நற்பண்பு செறிந்தவரும்
தன்னலங்கருதாத தரும சிந்தனையில்
பன்னலக் கருத்தொன்றும் பாவலரும், பண்டிதரும்
மாணவரின் நலத்தை மனமார உணர்ந்தவர்க்கு
ஆனவற்றைப் புகட்டும் ஆசிரியர் குழுவினரும்
வையத்து முதல்மதமாய் வானுயரப் புகழ்சேர்த்த
சைவசமயத்து தத்துவத்தை உணர்ந்தவரும்
ஒழுக்க நன்னெறியில் ஓங்கிநிற்கும் உத்தமரும்
அழுக்கா றற்றநல் அறிஞர்களும் குரவர்களும்
குருகுலத்து மரபை குற்றமின்றிக் காத்தவரும்
அருகமைந்து அருள்சுரக்கும் ஐங்கரனி னாசியினால்
எழுபத்தைந் தாண்டுகளாய் எழிலுறவே மாணவர்க்கு
பழுதின்றிக் கலையைப் புகட்டி வருவதனால்

எழுதுகின்ற பரீட்சையிலே எக்களிப்பு மிகவோங்க
பழுதின்றி தேறியவர் பட்டியலுக் களவில்லை
அயராத உழைப்பதனால் அந்நியர் நாடேகி
உயர்தரப் பதவிகளில் உயர்ந்தவர்கள் பலருள்ளார்
இட்டபடி கல்வி இசைவுறவே கற்றதனால்
கவிஞரெனப் புகழ்சேர்த்து களிப்படைவோர் பட்டியலும்
உறுதியுடன் இலக்கியத்தின் உட்பொருளை ஆராய்ந்து
சிறுகதைகள் எழுதிச் சிறப்புறுவோர் பட்டியலும்
ஆக்கமுடியுதில்லை; அகம்மகிழச் செப்புகிறேன்.

இவ்வாறு மக்களுக்கு இணையற்ற சேவை செய்ய
எவ்வாறு கைம்மாறும் ஈடாக முடியாது
தெய்வத்தின் பேரருளால் திகழ்கின்ற பள்ளியினை
உய்யவெனக் கைகூப்பி வாழ்க!வென வாழ்த்திடுவோம்!

□ □ □

*ஆன்மீக உணர்வையும், மனிதப்பண்பையும் வளர்க்க முடியாத கல்வியால் மனித சமுதாயம் பெரிதாக ஒன்றும் நன்மை அடைந்து விடப் போவதில்லை.*

# பவளவிழாக்காணும் புற்றளை மகாவித்தியாலயம்

***— ஆ. விநாயகமூர்த்தி (1952–1958)***

*பழைய மாணவன்*

*அகரமுத லெழுத்தென்னை யறியவைத்து*
*அருந்தமிழ னாய்நிமிர்ந்து நிற்கவைத்த*
*வகையிலிதென் வாழ்வினிலே நினைவில் நிற்கும்*
*வயதெழுபத் தைந்தாகுங் கல்லூரிக்கு*
*நிகரெதென நினைக்கின்றேன் கற்றல் நன்றே*
*நீள்புவியி லறிஞர்பல ரைத்தந்திங்கே*
*செகம்புகழ ஒளிபரப்புங் கல்விக்கூடம்*
*செழிப்புறவே வாழ்த்துகின்றேன் புலோலியூரான்*

*ஆலயத்தி னருகமைந்து அழகுமிக்க*
*அறிவகமா யறிமுகமா யானதன்று*
*ஞாலமிதில் புற்றளையி னைங்கரன்தன்*
*நற்கருணை யாற்சிறந்து பொலிவுற்றோங்கி*
*பாலகரை பலகலைகள் பயிலவைத்து*
*பண்டிதராய் வித்தகராய் விளங்கவைத்த*
*சாலவுயர் வித்தியாசா லைக்கெம்வாழ்த்தும்*
*சமர்ப்பணமு மாகுமிதென் நன்றியோடே*
*[மாக்குகின்றேன் நன்றி என்றும்]*

*இற்றைக்கு எழுபத்தைந் தாண்டுகட்கு*
*இதுமுன்பே ஆரம்பம் அறிந்துகொண்டோம்*
*கற்றற்கு யான்சென்ற தைம்பத் திராண்*
*டத்தோடு ஆறாண்டு கற்றேனிங்கே*
*அற்றைக்கென் னாசானா யமைத்துளோரை*
*அனைவர்க்குந் தெரிவித்த லதுவும் நன்றே*
*உற்றென்னை எழுதென்று உரைத்தாரன்று*
*உயர்சின்னத் துரையாசா னமரரின்றே.*

*ஈராண்டிற் கல்விக்கு ஆசானாக*
*இருந்தாரன் றெங்கட்கு அமரரான*
*பேராளன் திருகிருஷ்ண பிள்ளையென்னும்*
*பெருமகனா ரதன்பின்பு அடுத்தவாண்டில்*
*பேராண்மைத் தோற்றத்தோ டெழுந்து நின்ற*
*பேரதிபர் சிதம்பரப்பிள் ளையாசானே*
*ஓராண்டு திருமூசின் னத்துரையோ*
*டுயர்சுப்பி ரமணிய மாசா னானார்.*

உயர்முத்துக் குமாராசான் சின்னப்பிள்ளை
யுடன்வல்லி புரவாத்தி பாயரென்னும்
பெயரோரெம் மாசிரிய ராயமைந்த
பெருங்கல்வி நிலையம்புற் றளையூர்தன்னில்
உயர்வோடிங் கெழுபத்தைந் தாண்டியங்கி
உருவாக்கு மான்றோரை எண்ணவேண்டும்
செயுமாசி ரியர்சேவைச் சிறப்புமிங்கே
சிந்திக்க வேண்டும் நாம் நன்றியோடே

ஊரிலுயர் வானகல்வி நிலையமிங்கு
உருவாகக் காரணமா யிருந்த நல்லோர்
பேரதிபர் பணிபுரிந்த உபாத்தியாயர்
பெருநிலமுங் கட்டிடமும் மளித்த மேலோர்
பேரொளிரப் பவளவிழாக் காணும்வேளை
பங்களிப்புச் செய்தகொடை வள்ளலானோர்
ஊரவர்க ளனைவரையு மிங்கு வாழ்த்தி
உயர்கல்வி நிலையமிதை உயர்த்துவோமே.

எங்களருங் கல்லூரிக் கின்றுமென்றும்
எம்மினிய நல்வாழ்த்து உரியதாகும்
இங்கிதெழு பத்தைந்து ஆண்டுயர்ந்த
அரும்பணியைச் செய்துளது எம்மையெல்லாம்
இங்குதமி ழறிஞரென ஆகுதற்கு
ஆரம்பக் கல்விதனைத் தந்ததன்றோ!
இங்கிதனை நாம்நினைத்து இன்றுமென்றும்
இதுஉயர வைத்திடுவோ மிதுவே நன்றாம்.

ஏட்டறிவை யெமக்களிக்குங் கல்விக்கூடம்
எந்நாட்டி லும் உண்டு எமக்கு இந்த
நாட்டிலறி வனுபவத்தை ஆற்றலென்னும்
நற்றிறனைத் தந்துதொழி லாற்றவைத்து
நாட்டிலொரு நற்பெயரைத் தந்து எம்மை
நற்பிரசை யாக்குவது மிதுவே யன்றோ!
ஊட்டியநற் கல்விக்கு உபகாரம்போல்
உவந்துடனற் கவிவரைந்தேன் நன்றியோடே

ஐக்கியத்தி னவசியத்தை அன்பைப் பண்பை
அருந்தமிழி லாற்றலினை அறிவூக்கத்தை
கைத்தொழிலை கடைவணிகன் கணிதநுட்பக்
கணக்காளன் பொறியியலா ளறிஞனின்னும்
வைத்தியனை விவசாயி வெளியூர்வாழ்வோன்
வங்கியதி காரிநில அளவைவல்லோன்
கைத்திறனைக் காட்டும்தொழி லாளிஎல்லாம்
கற்றறிவு பெற்றதெங்கே? கருத்திற்கொள்ளே!

ஒவ்வொருவ ரும்மிதனை யுணரவேண்டும்
    ஒத்துழைத்து இதுவளர வைக்கவேண்டும்
இவ்வகையி லிங்கொருநல் விழாவை வைத்து
    எம்மைவிழித் தெழவைத்தோ ரென்றும்வாழ்க
பவ்வியமாய்ப் பவளவிழாக் காணுமெங்கள்
    படிப்பகமாம் கல்லூரி நீடுவாழ்க
இவ்வளவி லென்கவிதை நிறுத்துகின்றேன்
    இதுபோது மென்றிருப்பீ ராயின்நன்றே.

ஓம்போது மிக்காலஞ் செலவுகூட
    என்பீர்க ளெனயூகித் திதை நிறுத்தி
னேன்பாட்டிற் சொற்பிழைக ளிருக்கலாகும்
    எப்பிழையும் பொறுத்தேற்றல் நன்றதாகும்
நாம்பாட்டை யிங்கெழுதத் தூண்டுகோலா
    யானவன்பர்க் கிங்கேயென் நன்றிகூறி
ஓங்கார முகத்தவனை யென்றும் வேண்டி
    அவனாசி யருள்பொழிய வணங்குவேனே.

அவ்வளவும் போதுமென இடைநிறுத்தி
    அன்புடனே முடிவுரையுந் தந்தேனிங்கு
எவ்வளவு தானெழுதி னாலுமென்ன
    அதிற் கருத்தும் சொற்சுவையும் வேண்டுமன்றோ
இவ்வகையி லேதேதோ உளறிவிட்டேன்
    இதிற் கருத்து இல்லையெனில் மன்னிப்பீர்கள்?
பவ்வியமாய்ப் பவளவிழா வைக் கொண்டாடும்
    படிப்பக நூல் வெளியீட்டிற் கிது வென்னாக்கம்

அஃதிருக்க இங்குதமிழ் வாழவேண்டும்
    அநியாயம் அக்கிரமம் அழியவேண்டும்
இஃதெமதூர் இங்கேநாம் வாழவேண்டும்
    இடம்பெயர்ந்து ஓடுவதைத் தவிர்க்க வேண்டும்
எஃதெமது மொழிமதமோ அதனைப் போற்றி
    எல்லோர்க்கு மிடமளிக்க வேண்டுமிங்கே
பொய்களவு பொறாமை சூ தகலவேண்டும்.
    பொதுவுடமை பேசிடுவோ மிங்கே நன்றி!

□ □ □

*சுதந்திரம் மனிதகுலத்தின் பிறப்புரிமை என்றால் கல்வி அதன் வழிப் பிறக்கும் புனிதமானதும் பிரிக்க முடியாததுமான பண்பாட்டுரிமையாகும்.*

சிறுகதை

# —நேர்த்திக் கடன்கள்—

எழுதியவர் — புலோலியூர் க. தம்பையா

"கந்தையாண்ணை... ... துலையாலையோ வாறியள்?"

"ஓ! தம்பி மோகனே? எப்ப வெளிநாட்டாலை வந்தனீ? உன்ரை கொய்யாவும் நானும் அந்த நாளையிலை வலுகூட்டாளிமார். அதுசரி தம்பி வெளிநாட்டிலை இருந்து வந்த பெடியன்கள் நாய்ச்சங்கிலி மாதிரி அச்சரக்கூட்டோடை பவுண்சங்கிலி கழுத்திலை தொங்க மாறுகரைவேட்டி சால்வையோடை கோயிலுக்குள்ளை இராஜ நடை போட்டுக்கொண்டு திரியிறாங்கள் ... நீ என்னடா வெண்டால் கமக்காரன் மாதிரி நாலுமுழ வேட்டி கட்டி வெறும் மேலோடை நிற்கிறாய்... உனக்கு ஊருக்கை எக்கச்சக்கமாக பேச்சுக்கால்கள் வந்திருக்கெண்டு கொம்மா சொன்னா... வட்டிக்கடைத் தர்மலிங்கத்தார் தன்ரை ஒரே மகளை பத்து லட்ச ரூபா சீதனத்தோடை உனக்குக் கட்டிவைக்கப்போவதாக ஒரு பேச்சு ஊரிலை நடக்குது... எப்பதம்பி கலியாணம்?"

"அதெல்லாம் பேந்து சொல்லுறன்... உதென்ன கந்தையாண்ணை ஒரு கையிலை எவர் சில்வர் செம்பு, மறுகையிலை போற பாக்கிலை ஏதோ சாமான்?"

"தம்பி மோகன் நான் இப்ப உந்த முருகையன் கோயில் கந்தசட்டிப்பூசை கண்டு கொண்டு வாறன். செம்புக்குள்ளை கோயில் தீர்த்தம். போற பாக்குக்குள்ளை ஐஞ்சுகிலோ நம்பர் வன் பச்சை அரிசி தீட்டல் தவிடு... உவன் சிங்கன்ரை கடையிலை வாங்கிக்கொண்டு வாறன். வீட்டிலை வாயில்லா முறுகம் ஒண்டு நிக்குது... அதுக்குத்தான் இந்தத் தவிடு..."

"கந்தையாண்ணை நீங்களும் ஆடு மாடு வளக்கத் துவங்கிவிட்டியளோ? உங்கடை வியாபாரத்தொழிலுக்கு இது இடைஞ்சலெல்லே?"

"நானாவது ஆடு மாடு வளக்கிறதாவது... நான் கந்தசட்டி விரதம் பிடிக்கிறனெல்லே! விரதம் துவங்க முந்தி இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒரு கிடாய் ஆடு வாங்கி ஒரு கொட்டில் போட்டு பக்குவமாய் வளக்கிறன். நாளையிண்டைக்குப் பாறணைப் பூசையோடை கந்தசட்டி விரதம் முடிஞ்சு போடும். அடுத்தநாள் சனிக்கிழமை இந்தக் கிடாய், கறியாய், பிரட்டலாய், பொரியலாய், சூப்பாய் சட்டியளுக்குள்ளை கிடந்து பளபளக்கும். பின்னென்ன தம்பி ஆறு நாளும் அன்னம் தண்ணி இல்லாமல் விரதம் பிடிச்சுப்போட்டு விரதம் முடிய கீரையையும் கத்தரிக்கிடாயையும் திண்டால் ஆசுப்பத்திரியிலைதான் போய்க் கிடக்கவேணும். இப்பிடி ஒருகிடாயை வெட்டி ஆக்கினால் தான் ஆறு நாள் விரதக் களை தீரும்.

விரதம் துவங்க முந்தியே அதாவது நோர்வைக்கு முதல் நாள் தீபாவளிக் கணக்காக ஒரு கிலோ ஆட்டீரல் தம்புசாமி இறைச்சிக் கடையிலை வாங்கி பொரிச்சடிச்சனான். அப்பதான் ஆறுநாள் விரதத்தையும் தாக்குப் பிடிக்கேலும்..."

"கந்தையாண்ணை நீங்கள் உடம்பிலை படு கவனம் எண்டு சொல்லுங்கோ..."

"நான் மட்டுமல்ல தம்பி... கந்தசட்டி விரதம் பிடிக்கிற கனபேர் என்னைப்போலத்தான்... தம்பி உனக்குத் தெரியுமோ என்னவோ... தம்புசாமியின்ரை இறைச்சிக் கடையிலை ஒவ்வொரு கந்தசட்டி முடிவிலையும் குறைஞ்சது ஐம்பது கிடாயாவது வெட்டுவினம். ஆசுப்பத்திரியிலை நம்பர் எடுக்கிற மாதிரித்தான விரதகாறர் கியூவிலை நிண்டு வாங்குகிறமாதிரி இறைச்சி வாங்குவினம்.'

''அதுசரி கந்தையாண்ணை உங்கடை இந்த கடும் விரதத்துக்கு ஏதாச்சும் நேத்திக்கடன் இருக்குமோ?"

''இல்லாமலென்ன தம்பி... என்ரை ஒரே வாரிசான என்ரை மோன் ஓ. எல். ஏ்பெசல் சோதனை எடுத்திருக்கிறான்... நாளை நாளையிண்டைக்கு முடிவும் வந்திடுமாம். அவன் எட்டு டீ எடுக்கவேணும் எண்டுதான் முருகனுக்கு இந்த விரத நேர்த்தி...''

"அது சரி கந்தையாண்ணை.. இரண்டாயிரம் ரூபாய் கிடாயையும் நீங்கள் சாப்பிடப்போறியளோ?''

''இல்லைத்தம்பி, இதிலையும் ஒரு பிசினஸ் இருக்கு. நூறுரூபா வீதம் முப்பது பங்கு போடப்போறன். இதிலை எனக்கு ஆயிரம் ரூபா வெளிக்கும். இதிலை நாலு பங்கு எனக்கு. இருபத்தாறு பங்குக்கும் எக்கச்சக்கமான புக்கிங் இருக்கு.. புக்கிங் செய்த ஆக்களெல்லாரும் விரதகாரர்கள்தான்.

இப்ப நான் இந்த முருகையன் கோயிலைச் சுத்திக் கும்பிட்டுக் கொண்டு வரேக்கை வடக்கு வீதியிலை ஒரு விரதகாரன் எனக்குக்கிட்டவந்து 'கந்தையாண்ணை இந்தாருங்கோ நூறுரூபாய்... எனக்கும் ஒரு பங்கு வைச்சிடுங்கோ' எண்டு மண்டாடெண்டு மண்டாடினான்.

'ஓவர் புக்கிங் வந்திட்டுது... பங்கில்லை' எண்டு நான் விரட்ட... 'கந்தையாண்ணை ஆட்டுத்தலை பங்கு போடுகிறதில்லைத் தானே... ஆட்டுத்தலையாவது எனக்குத் தாருங்கோவன்'' எண்டு மண்டாடினான்.

''ஆட்டுத்தலை எனக்குச் சூப்பு வைக்க வேணும்' எண்டு நான் சொல்ல 'பின்னை ஆட்டு இரத்தத்தை யாவது தாருங்கோவன் சுண்டித் தின்னுவம் எண்டு அழுவாரைப் போலக் கேக்கிறான்..''

''தம்பி மோகன் அப்படி நான் வாங்கி விட்டிருக்கிற கிடாய்க்கு அவ்வளவு டிமாண்ட்... கிடாயை நீ வந்து பாத்தியெண்டால் ஏங்கிப்போவாய்... அதின்ரை வடிவு. ஆடோ இது மாடோ எண்டு வாயிலை கை வைப்பாய்... தம்பி மோகன் பங்குகளிலை சோவிட்டு உனக்கொரு பங்கு வீட்டுக்கு பிறீயா அனுப்பி வைக்கிறன்''

''வேண்டாம் கந்தையாண்ணை...நான் மாமிசம் சாப்பிடுகிறதில்லை..''

' தம்பி பின்னை நான் போட்டுவாறன். அதுசரி உன்ரை கலியாணத்தைப்பற்றிச் சொல்லேல்லை...''

''கந்தையாண்ணை நீங்கள் விரதங்களையெல்லாம் பக்குவமாய் முடிச்சுப் போட்டு வாருங்கோ... ஆறுதலாய் நான் சொல்லுறன்...''

''ஓம் தம்பி இனிநான் சுணங்கேலாது, அங்கை அந்த வாயில்லாத சீவன் பசியிலை எனக்காகக் காத்திருக்கும். நான் போய் அதுக்கு இந்தத் தவிட்டை குழைச்சுத் தீதநிப் போட்டுத்தான் நான் தீத்தம் குடிப்பன். அப்ப நான் போட்டுவாறன் தம்பி '' என்று கந்தையாண்ணர் விடைபெற்றுக்கொண்டு போனபின் மோகன் பெருமூச்செறிகிறான்.

''முருகா... இவர்களையெல்லாம் மன்னிப்பாயாக என்ன பக்தி ஐயா இவர்களுக்கு! விரதங்களின் தத்துவங்களையோ, பக்தி நெறி முறைகளையோ உணராமல் செம்மறி ஆட்டுக் கூட்டம்போல், 'மற்றாக்களுக்கு மட்டும்தானா விரதம்பிடிக் கத்தெரியும் இதோ நானும் பிடிச்சுக்காட்டுறன்' என்று விரதத்தை ஒருசவாலாகவும் பாஷனாகவும் ஆக்கி கோயிலை பாவிகளின் கூடாரமாக்கி மீண்டும் மீண்டும் பாவமூட்டைகளைக் கட்டும் இந்த மனிதர்களை முருகா நீ மன்னிப்பாயாக' என்று வேண்டிக்கொண்டே மோகன் நடக்கிறான்.

கந்தசட்டிப்பாறணை முடிந்த அடுத்த நாள் அதிகாலை இருபது இருபத்தைந்து பேர் கந்தையாண்ணன் வீட்டில் 'ஒரு முற்றுகை' மாதிரிக் கூடிவிட்டார்கள். எல்லோரும் விரதம் பிடித்தவர்கள்தான்!

''கந்தையாண்ணை துவங்குவமே? கிடாயை உங்கடை பனங்கூடல் காணிக்

கெல்லே கொண்டுபோகவேணும்... அங்கை தானே அழிக்கிறது'' என்று முற்றுகையிட்டவர்கள் கோரஸ் பாட....

''ஓமோம்...நீங்கள் கொண்டுபோங்கோ நான் வந்திட்டன் '' என்று சொல்லிக் கொண்டே கந்தையாண்ணை அறை ஒன்றினுள் புகுகின்றார்.

ஆரவாரத்தோடு கிடாயைப் பக்குவமாய் அவிழ்த்து மாப்பிள்ளை ஊர்வல அழைபபு உற்சாகத்தோடு விரதகாரர்கள் கிடாயைப் பனங்கூடலுக்கு அழைத்துச் செல்கிறார்கள்!

கந்தசட்டி விரத ஆரம்பநாளுக்கு முதல் நாள் வாங்கி வைத்திருந்த கறுப்பன் போத்தலைத் திறந்து கிளாசொன்றில் ஊற்றி லபக் கெனக்குடித்துவிட்டு வாயைப் புறங்கையால் துடைத்துக்கொண்டே ஒரு செல்லச் செருமலோடு புதுமனிதனாகி அறையை விட்டு வெளியேறி பனங்கூடலைநோக்கி நடக்கின்றார் கந்தையாண்ணர்.

''என்ன கந்தையாண்ணை ஆடுவெட்டுகிறவனை இன்னும் காணேல்லை...ஆறு மணிக்கு வாறனெண்டவன்...அவனுக்கும் கன இடத்திலை இண்டைக்குப் புக்கிங் காம்''

பனை ஒன்றுடன் கட்டப்பட்டிருக்கும் ஆட்டுக்கிடாய் கந்தையாண்ணனைக் கண்டதும் தலையைத் தலைலய ஆட்டுகிறது. தனக்குத் தவிடு தீத்த வருகிறார் என்று அது நினைத்திருக்கும்!

''அவன் வாறநேரம் வரட்டும்...கோப்பறேசனுக்குப் போறாக்கள் போட்டுவாருங் கோவன்'' என்று கந்தையாண்ணன் சொல்ல சிலர் எழும்பிக்கொள்ளுகிறார்கள்.

நேரமோ எட்டுமணியாகிவிட்டது. ஆடு வெட்டுபவனை இன்னும் காணவில்லை.

கந்தையாண்ணனின் மனைவி பதறியடித்துக்கொண்டு பனங்கூடலுக்கு ஓடி வரவே எல்லோரும் பயந்தேவிட்டார்கள்.

''என்னடி என்ன நடந்தது....பராதியாய் ஓடி வாறாய்'' என்று கந்தையாண்ணன் மனைவியைக் கேட்கிறார்.

கமலம் சத்தம் போடுறாள்.

''நீங்களும் உங்கடை விரதமும். நீங்கள் நேத்தி வைச்சு விரதம் பிடிச்சது பெடியன்ரை படிப்புக்கோ, இல்லை ஆட்டிறைச் சிக்கும் சாராயப் போத்தலுக்குமோ?''

''என்னடி விசர்க்கதை கதைக்கிறாய்? எனக்கிருக்கிற விரதக் களைக்கு எழும்பி இரண்டு இறுக்கு இறுக்கினனெண்டால்... என்னடி நடந்தது சொல்லன்ரீ...''

''பெடியன் சோதனையிலை எட்டுப் பாடமும் பெயில் .. வில்சன் கொலிச்சிலை படிச்ச பக்கத்துப் பெடியன் எட்டுப்பாடத் திலையும் டீ எடுத்திருக்கிறானாம்.''

கந்தையாண்ணனுக்குக் கறுப்பன் வேலை செய்யத் தொடங்கிவிட்டது.

''டியேய் கமலம் என்ரை விரதத்திலை பிழை ஒண்டும் இல்லையடி. அறுநாளும் தீத்தத்தோடைதான் பிடிச்சனான். பிழையெல்லாம் உந்தச் சின்னத்தம்பிப் பள்ளிக் கூடத்து பிறின்சிப்பலான்ரை பிழை. உவங்கள் உந்தச் சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்திலை என்ன முட்டை வைச்சு அடைகாக்கிறாங்களோ? வில்சன் கொலிச்சிலே எட்டு டீ எண்டு பெடியள் பாஸ் பண்ணேக்கை இந்தச் சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்திலை அ தர்காலம் தொடங்கி மட்டு மட்டான பாசுகளும் பெயிலும்தானே வருகுது...உந் தப் பிறின்சிப்பலை ஒரு கை பாக்கிறன்... படிப்பிக்க வந்தவங்களோ மாடு மேய்க்க வந்தவங்களோ'' என்று முகம் சிவக்க கறுப்பன் கொடுத்த உசாரோடு சின்னத்தம்பிப் பள்ளிக்கூடம் நோக்கிப்போக எழும்புகிறார் கந்தையாண்ணை.

'' ஆடு அழிக்கிறவன் வந்திடுவான்... நீங்கள் பாத்துக்கொண்டு நில்லுங்கோ... நான் போட்டுவாறன்'' என்று சொல்லிக் கொண்டே ஆவேசயாக நடக்கிறார் கந்தையாண்ணை.

''என்ன கந்தையாண்ணை... அவசர மாய்ப் போறியள் போலை'' ஆலமரத்தடியில் மோகனின் குரல்கேட்டு அப்படியே நிக்கிறார் கந்தையாண்ணை.

''ஆர் தம்பி மோகனே! நான் உந்தச் சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்துப் பிறின்சிப்பல் பேயனைக் காணப்போறன்.''

''என்ன வில்லங்கம் கந்தையாண்ணை?''

''ஒண்டுமில்லை தம்பி. என்ரைமோன் ஓ. எல். பெயில். அதுதான் உந்தப் பிறின்சிப்பலைக் கிளிகிளியெண்டு கிளிச்சுப் போட்டு வரப்போறன். வில்சன் கொலிச்சிலை திறமான றிசல்ட்டாம்—உந்த வாத்திமார் உங்கை நித்திரை கொள்ளுகினமோ எண்டு பாப்பம்''

''கந்தையாண்ணை வாத்திமாரிலை பிழை சொற்லுறது அறியாமை. வாத்திமார் வாத்திமார்தான். பிழை எல்லாம் எங்களிலைதான்.''

வில்சன் கொலிச் வாத்திமார் முழுப்பேரும் சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்துக்கு வந்து படிப்பிச்சாலும் உந்த றிசல்ட்தான் சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்துக்குக் கிடைக்கும். அதேமாதிரி சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்து அத்தனை வாத்திமாரும் போய் வில்சன் கொலிச்சிலை படிப்பிச்சாலும் மிகத் திறமான றிசல்ட்தான் வில்சன் கொலிச்சுக்கு வரும்.''

''தம்பி நீ செல்லுறது எனக்கு ஒண்டும் விளங்கேல்லை''

''கந்தையாண்ணை ...வில்சன் கொலி ஐந்தாம் வகுப்பிலை இருந்துதானே துவங்குது. இந்த ஐந்தாம் வகுப்புக்கு வில்சன் கொலிச் என்னண்டு பிள்ளைகளைச் சேர்க்கினம் எண்டு தெரியுமோ? அட்மிசன் ரெஸ்ற் எண்டு ஒண்டு வைச்சு வடிகட்டி திறமான கெட்டிக்காரப் பெடியளை மட்டும்தான் சேர்க்கினம்.

சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்துக் கெட்டிக்காரப் பெடியன்களும் இந்த அட்மிசன் சோதனையிலை பாஸ் பண்ணி வில்சன் கொலிச்சுக்குப்போய் விடுகிறாங்கள். உங்கடை மகனும் அந்த நாளிலை அட்மிசன் சோதினை எடுத்துப் பெயிலாகி ஏலாக் கைக்குத்தான் தொடர்ந்து சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்திலை படிக்கவிட்டிருப்பியள். அப்ப, ஐந்தாம் வகுப்பிலை உள்ள கெட்டிக்காரப் பெடியளெல்லாம் வெளியேறினால் சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்துக்கு மிஞ்சிப்போறது என்ன? விவேகம் குறைந்த மொக்குப் பிள்ளைகள்தான் மிஞ்சுகிறார்கள். இந்த மிஞ்சிப்போன பிள்ளைகள் தொடர்ந்து படித்து ஓ. எல்லுக்கு வந்து சோதனை எடுத்தால் எப்படி இருக்கும். எல்லாப் பிள்ளைகளும் பெயில்தான் பண்ணுவார்கள். அப்படி இருந்தும் இந்தப் பள்ளிக்கூடத்து மாணவர்கள் அரைக்கரைவாசியாவது சுமாராகப் பாஸ்பண்ணி விடுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் இங்கை படிப்பிக்கிற வாத்திமாரின் விடாமுயற்சியும், கெட்டித்தனமும், பொறுமையும்தான். இந்த வாத்திமாரின் தொண்டுதான் உண்மையான ஆசிரியத் தொண்டு.

வில்சன் கொலிச் வாத்திமாருக்கு வேலை லேசு; கத்திப் படிப்பிக்கத் தேவையில்லை. காரணம் எதைப் படிப்பித்தாலும் கிரகித்துக்கொள்ளக் கூடிய கெட்டிக்காரப் பிள்ளைகள்தான் அங்கே படிக்கிறார்கள். எந்தச் சோம்பேறி வாத்தி போய் அங்கை படிப்பிச்சாலும் பெடியன்களுக்கு எட்டு டீ கிடைக்கும்.

வில்சன் கொலிச் இலங்கையிலேயே திறமான பள்ளிக்கூடம் - எட்டு டீ எடுக்கிற கொலிச் - என்று பெருமைப்பட்டு புழுகித் திரிவது அறியாமைதான்!

ஒரு பிள்ளையை அரிவரியிலை இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிப்பிப்பதுதான் இமாலய வேலை - எவ்வளவோ பொறுமை தேவை இப்படி சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்து வாத்திமார் அரிவரியிலை இருந்து ஐந்தாம் வகுப்புவரை மாரடித்து, கஷ்டப்பட்டு படிப்பித்துவிட - இந்த வாத்திமாரின் விடாமுயற்சியால் கெட்டிக்காரனாகும் பெடி

யன்களை தேப்பன்மார் பறித்துக்கொண்டு போய் வில்சன் கொலிச்சிலை சேர்த்தால் சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்துக்கு கெட்ட பெயர்தானே மிஞ்சும்.

தான் மாரடித்து எவ்வளவோ பொறுமையோடு கஷ்டப்பட்டு படிப்பித்துக் கெட்டிக்காரனாக்கிய தன் பிள்ளைகள் தன்னை விட்டு ஐந்தாம் வகுப்பில் பிரிந்து போகும் போது சின்னத்தம்பிப் பள்ளிக்கூடம் என்ற தாய்க்கு பெற்ற வயிறு எரிவது போன்ற வேதனையைத்தான் நாங்கள் கொடுக்கிறோம்.

சின்னத்தம்பிப் பள்ளிக்கூடமும் வில்சன் கொலிச் மாதிரி எட்டு டீ எடுக்கிற பள்ளிக்கூடமாக மாற்றுவது இந்தப் பள்ளிக் கூடத்துப் பழைய மாணவர்களின் கையிலேதான் இருக்கிறது.

பழைய மாணவர்கள் தங்கள் பிள்ளைகளையோ, பேரப்பிள்ளைகளையோ சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்தில் ஒரு நேர்த்தியோடு அரிவரியில் சேர்த்து விடவேண்டும். அதாவது எங்கள் பிள்ளைகளை அரிவரியிலிருந்து உயர் வகுப்புவரை இந்தப் பள்ளிக்கூடத்திலேயே படிக்கவைப்போம் என்று பெற்றோர்கள் நேர்த்திக்கடன் செய்ய வேண்டும்.

இதேமாதிரி அரிவரியிலிருந்து ஆரம்பிக்கும் மற்ற பள்ளிக்கூடத்து மாணவர்களின் பெற்றோர்களும் நேர்த்திக்கடன் செய்தால் வில்சன் கொலிச்சை மூடிவிடவேண்டியது தான். ஏனெனில் ஐந்தாம் வகுப்பு அட்மிசன் ரெஸ்ற் என்று வில்சன் கொலிச் போடும் வலையில் எந்த மாணவனும் சிக்க மாட்டான். மாணவர்கள் சேராவிட்டால் பள்ளிக்கூடத்தை மூடவேண்டியதுதானே.

கறையான் புத்தெடுக்க பாம்பு குடியிருந்த கதைதானே இது ஆரோ பேர் எடுத்துக் கொண்டு போறான்.

கந்தையாண்ணை இதை நீங்கள் விளங்கிக்கொள்ளாமல் சின்னத்தம்பிப் பள்ளிக்கூடத்துப் பிறின்சிப்பலிலையும் வாத்திமாரிலையும் குறைகாணுவது எவ்வளவு பாபமான காரியம்!''

''தம்பி மோகன்...நீ சொல்லுறது நூற்றுக்கு நூறு சரி... நான் திரும்பி வீட்டை போகப்போறன் — அது சரி தம்பி மோகன் உன்ரை கலியாண விசயத்தைப் பற்றிச் சொல்லுறனெண்டாய் — எப்ப கலியாணம்? எப்ப பெம்பிளையை வெளிநாட்டுக்குக் கூட்டிக்கொண்டு போறாய்?''

'' கந்தையாண்ணை ... நான் வெளிநாட்டிலை இருக்கேக்கை எனக்கு ஊருப்பட்ட சம்பந்தம் வந்ததுதான் — ஆனால் இபப் எல்லாம் நிண்டு போச்சு.''

''ஏன் தம்பி உனக்கேதும் லவ்வு கிவ்வு இருக்கே?''

''அப்பிடி ஒண்டும் இல்லை கந்தையாண்ணை இனி நான் எந்த வெளிநாட்டுக்கும் போறதில்லை — இந்த ஊரிலையே இருந்து கொண்டே தோட்டம் செய்யப் போறனெண்டு எல்லாருக்கும் சொல்லிப் போட்டன்.''

''என்ன தம்பி தோட்டத்திலும் பாக்க வெளிநாட்டு வேலை வலு திறமெல்லே ''

''என்ன விதத்திலை திறம் கந்தையாண்ணை? நாங்களென்ன எஞ்சினீயறிங் படிப்புப் படிச்சிட்டே வெளிநாட்டுக்குப் போறம்? தன் கை யழுத்தே போடத்தெரியாத கேசுகள் தான் கூடுதலா வெளிநாட்டுகுப் போறதுகள். இவையள் அங்கை போய் என்ன வேலை செய்ய முடியும்? அடிமைத் தொழில்தான் செய்யலாம். அடிமைக்கு அடிமையாகும் தொழில்தான் இவர்களுக்கு அங்கே கிடைக்கும்!

நான் ஒரு வீட்டிலை கிளீனர் எண்டு தான் சேர்ந்தனான். அந்த வீட்டுக் கக்கூசுகளைக்கூட நான்தான் கிளீன் பண்ண வேணும். மலத்தோடு புரளுகிற வேலை அது. தரக்குறைவாகத் துப்பரவு செய்தாலோ சவுக்காலை அடிப்பான்கள் நான் பலதடவை சவுக்கடி வாங்கி அழுதிருக்கிறன்.

அதிகாலை நாலு மணிக்கே தண்ணீர் ஊற்றி எழுப்பாத குறையாக சத்தம் போட்டு வீட்டு எசமான் என்னை எழுப்பி

விடுவான். சாமம் பன்னிரண்டு மணிவரை ஓரே ஓயாத வேலை. சாமம் பன்னிரண்டு மணிக்குப் போய்ப் படுத்தாலும் நிம்மதியாகத் தூங்கமுடியாது. தூக்கத்திலும் அலாம் அலறும் குழந்தை ஒன்று படுக்கையிலேயே பீச்சிப்போட்டுது உடனே வந்து கிளீன் பண்ணு எண்டு ஓடர்வரும். விழுந்தடித்துக் கொண்டு ஓடவேணும். கொஞ்சம் தாமதித்தால் கிடைப்பது சவுக்கடி! நரகம் -- நரகம் கந்தையாண்ணை ...

இஞ்சை பெற்ற தாய்க்கே ஒரு துரும் பெடுத்துக் குடுக்காங்கள் — அங்கை ஆரோ பிறத்தியானுக்கு அசிங்கமான தொழில் செய்யிறாங்கள்!

நான் அங்கை போய்ச் சேர்ந்த மறு நாளே திரும்பி இஞ்சை ஓடிவரத்தான் இருந்தன். அம்மா என்னை அனுப்பப் பட்ட கடனை நினைச்சு பல்லைக் கடிச்சுக்கொண்டு இரண்டு வருஷம் நிண்டுபிடிச்சன்,

இந்த வேலைக்குத்தான் இஞ்சை பத்து லட்ச ரூபா சீதனம் தர வெளிக்கிட்டவன்கள் எங்கடை ஆக்கள். ஒரேயடியாக வெளி நாட்டு வேலையை விட்டு விட்டு இங்கே வந்து, தான் லீவில் வந்ததாகவும் கலியாணம் ஒன்று கட்டிக்கொண்டு லீவுமுடிய பெண் சாதியையும் கூட்டிக்கொண்டு வெளிநாடு போகப் போவதாகவும் பொய் சொல்லி கொழுத்த சீதனத்தோடை கலியாணம் முடிச்சு பெண் வீட்டாரைப் பல பேர் ஏமாற்றியிருப்பதுவும் எனக்குத் தெரியும்.

இவங்கடை பிளானிலை நானும் பத்து லட்சம் சீதனம் வாங்கலாம். ஆனால் எனக்குத் தெரியாதது இரண்டே இரண்டு விசயங்கள்தான். ஒன்று பொய் பேசுவது, மற்றது களவாடுவது! என் சுகத்துக்காக மற்றவர்களை ஏமாற்றுவது எனக்குப் பிடிக்காத விசயம்.

"ஓ! என்ரை தம்பி மோகன் - உன்னை நான் ரொம்பவும் மதிக்கிறன் - சே! எனக்கொரு பொம்பிளைப் பிள்ளை இருந்தால் உனக்குத்தான் கட்டிவைச்சிருப்பன் - இப்பிடியான குணமுள்ள பெடியன் நீ ஏன் கோயில் குளத்துக்குப் போறதில்லை?"

"ஏன் நான் போறனானே! ஆனால் போற நேரம்தான் வேறை. பூசை முடிஞ்சு சனமெல்லாம் கோயிலை விட்டுப் போன பிறகுதான் நான் கோயிலுக்குப் போறது.

இந்த வருஷப் பிறப்பண்டு அம்மாவின்ரை ஆய்க்கினைக்காக வருஷப் பூசை காண இந்த முருகையன் கோயிலுக்குப் போனன். எக்கச்சக்கமான பக்தகோடிகள்!

முட்டுப்பட்டதுகளின்ரை காணிகளைக் கள்ள உறுதி முடிச்சு அபகரிக்கிற நொத்தாரிசு சண்முகத்தார் அரோகரா சத்தத்தோடு மூலஸ்தானத்துக்குக் கிட்ட நிக்கிறார்,

வெளிநாட்டில் என்னை மாதிரி சவுக்கடி வாங்கி கிளீனர் வேலைசெய்து அடிமைப் பிழைப்புச் செய்யும் வசந்தனின் மனைவி மூக்கைத் துளைக்கும் வெளிநாட்டுச் சென்ட் மணம்வீச நவநாகரீக உடையோடு தங்க நகைகளின் அலங்காரத்தோடு ஸ்ரைலோடு "ஓ மை லோட் முருகா" என்று கவிதைக் குரலில் கும்பிடுகிறாள் —

வட்டிக்கடை வைச்சு மீட்க முடியாத நகைகளைத் தனதாக்கி மகளுக்கு ஐந்து லட்ச ரூபா சீதனம் கொடுத்த பேரம்பலத்தார் பக்தி இட்டு "முருகா முருகா" என்று கோஷமிட்டுக் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்

புட்டிசங்கள் போட்டு கனகுடும்பங்களை அழித்த ஆறுமுகத்தாரும் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிடுகிறார்.

மனைவி இருக்க இன்னொருத்தன் மனைவியோடு தன் பணத்தால் கள்ளத் தொடர்பு வைத்திருக்கும் வைத்திலிங்கத்தார் சிவ தீட்சைக் குறிகளோடு தேவாரம் பாடுகிறார்.

தன் சொத்துக்கள் முழுவதையும் மகனுக்கு எழுதிவிட்டு தன் ஒரே மகளை அம்போ எண்டு அலையவிட்ட தெய்வானை

யும் கோயிலைச் சுற்றிச் சுற்றிக் கும்பிடு கிறாள்.

இவர்களை யெல்லாம் கண்டு என் மனம் கொதித்தது. கும்பிடவே மனம் ஏவவில்லை. பாவிகள் நிறைந்த நேரம் பூசைநேரம். இதனால்தான் நான் பூசை நேரங்களில் கும்பிடப் போவதில்லை.

இவர்களெல்லாரும் என்ன நினைத்துக் கும்பிடுகிறார்கள் தெரியுமா?

மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை இந்த மூன்றும்தான் இவர்களின் பக்தியின் மூலப் பொருள்.

''காணி வழக்கிலை அவன்ரை காணி எனக்குத் தான் தீரவேண்டும் முருகா!

அரிசி, மா, சீனி விலைகளை இன்னும் ஏற்றிவைமுருகா. நான் பதுக்கி வைச்சிருக்கிற சாமான்களை கோடி ரூபாவுக்கு வித்துத்தா முருகா!

மிஸ்ஸிஸ் அருளம் லத்தை எனக்கு வளைச்சுத் தந்தியெண்டால் முருகா உனக்கொரு வசந்த மண்டபம் கட்டித்தருவேன் முருகா!

என்ரை விரோதி தணிகாசலத்தான்ரை காலை அடிச்சு முறிச்சுவை முருகா!

இத்தியாதி நேர்த்திக்கடன்களோடுதான் ஆண்டவனைத் தியானிக்கிறார்கள் நம்மவர்கள். இது பக்தியா?

தனக்காக மட்டுமல்ல பிறருக்காகவும் பிரார்த்திக்கிறவன் எவனோ அவன் தான் உண்மையான பக்தன்.

பக்தன் தன் ஆத்ம ஈடேற்றத்துக்கும் பிறரின் நல்வாழ்வுக்குமாகவே பிரார்த்திக்க வேணும். காமம், கொலை, களவு அற்ற வாழ்க்கை வாழ ஆண்டவனின் அருள் வேண்டி நிற்கவேண்டும்.

கந்தையாண்ணை கந்தசட்டி விரதம் பிடிச்சு கையோடு ஒரு உயிரைப்பலி எடுத்து அந்த உயிர்த் துடிப்பிலே கொண்டாட்டம் நடத்தப்போறியளே இது எவ்வளவு கொடூரமான, பாபகரமான பாதகச் செயல்.

உங்கள் கையாலேயே தவிடு தீத்தி, உங்கள் பிள்ளையாக்கி-தனக்கு அன்னமிட்ட உங்களையே நம்பிய அந்த வாயில்லாச் சீவனை-நாளைக்குப் புழுத் தின்னப்போகும் இந்த நிலையற்ற உடம்பை வளர்க்கிற இன் பத்துக்காக கொலை செய்யிறியளே. இது தானா நீங்கள் ஆண்டவனுக்குச் செய்கிற தொண்டு? இதுதானா உங்கள் நேர்த்திக் கடன்?

'கொல்லான் புலாலை மறுத்தானைகைகூப்பி எல்லா உயிரும் தொழும்'

''ஓ தம்பி மோகன் போதும் நிறுத்து'' என்று தழுதழுத்த குரலில் கைகூப்பி சொல்லிக் கொண்டே கந்தையாண்ணை விருட்டென எழுந்து தன் வீடு நோக்கி ஓடுகிறார்.

பனங்கூடலுக்குள் நுழைகிறார். ஆடு வெட்டுபவன் இன்னும் வந்து சேராததால் கிடாய் ஆடு அப்படியே கட்டிய இடத்தில் நிற்கிறது. நேரம் ஒன்பது மணியாகிவிட்டது! கந்தயாண்ணனைக் கண்டவுடன் கிடாய் ஆடு தலையைத் தலையை ஆட்டுகிறது.

''ஓ! முருகா இதுவும் உன் புதுமைதான்' ஆறுமணிக்குக்கட்டாயம் வந்திடுவன் என்று எனக்கு உறுதியாகச் சொன்ன அந்த ஆடு வெட்டுபவனை, குறித்தநேரத்தில் வந்து நிற்கும் அவனை இண்டைக்கெண்டு இவ்வளவு நேரமும் எங்கோ சுணக்கி வைத்திருக்கிறாயே முருகா-இது உன் புதுமைதான் ஐயா'' என்று உடல் சிலிர்த்தவாறு கட்டியிருக்கும் ஆட்டை. அவிழ்க்கப் போகின்றார் கந்தையாண்ணர்.

''என்ன கந்தையாண்ணை ஆடு அழிப்பவன் இன்னும் வரேல்லை எண்ட கோவத்திலை ஆட்டை அவிட்டுக்கொண்டு போய் வேறை இடத்திலை அழிப்பிக்கப்போறியளோ... நாங்களும் கூடவாறம்...'' என்ற கதம்ப இசையோடு கந்தையாண்ணனுக்குக் கிட்ட ஓடி வருகிறார்கள் ஆட்டுப்பங்கெடுக்க வந்திருந்த விரதகாரர்கள்.

''எல்லாரும் கெட் அவுட் ஆடு வெட்டுகிறதில்லை. எல்லாரும் தங்கடை தங்கடை வீட்டை போகலாம்'' என்று கண்டிப்பான தொனியில் சொல்லிக்கொண்டே கிடாய் ஆட்டை அவிழ்க்கிறார் கந்தையாண்ணர்.

கிடாய் ஆட்டை நேராகத் தன் வீட்டுக்குக் கொண்டுவந்து பக்குவமாய் கொட்டிலில் கட்டிவிட்டு, ஆட்டைத் தடவிக் கொடுக்கிறார்.

''டியேய் கமலம், இந்தக்கிடாயை நான் இனி வளர்க்கப்போறன்-தானாக இது வயது வந்து சாகும் வரை-இது இனி என்ரை பிள்ளை'' உணர்ச்சி வசப்பட்டு கணவன் சொன்னபோது மனைவி கமலம் மகிழ்ந்தே போனாள்! (யாவும் கற்பனை)

# அறிவைத் தேடி........

நாம் கோவில் கட்டுகிறோம், நீச்சல் தடாகங்கள் கட்டுகிறோம், அன்னசத்திரங்கள் அமைக்கின்றோம், தரும சின்னங்களாகிய சுமைதாங்கிகள், ஆவுரஞ்சிக்கற்கள், மிருகங்கள் பட்சிகள் தாகம் தணிக்க நீர்த் தொட்டிகள் அமைக்கின்றோம். இப்படி எத்தனையோ தரும கைங்கரியங்கள் நடைபெற்றன; நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவைகள் நல்லவைதான். ஆனால் இவை எல்லாவற்றையும்விட மேலான தருமம், அறிவுபெற்ற மனிதன், இருட்டில் தடுமாறும் சக மனிதனுக்குச் செய்யவேண்டிய தருமம்: அறிவாலயங்கள் அமைத்தல், கல்விக்கூடங்கள் அமைத்தல், நூல்நிலையங்கள் அமைத்தல் போன்ற அறிவூட்டும் - அஞ்ஞான இருள் அகற்றும் சின்னங்களை அமைத்தலாகும். இதை பாரதியார் தனது பின்வரும் பாடல் ஒன்றில் மிகவும் அழகாக எடுத்துக் கூறுகிறார்.

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண்சுனைகள் செய்தல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும் —
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்."

என்ன அழகான பாடல்! உள்ளத்தின் தெளிவினால், ஞானஒளியினால் பாடப்பட்ட பாடல்: எழுத்தறிவித்தவன் இறைவனாகும். கல்வி அறிவில்லாதவன் மனிதனாகப் பிறந்து என்ன பயன்? அதுவும் தான் பெற்ற கல்வியையும் அறிவையும் மற்றவர்களுக்கு வழங்காமல், அதுவும் ஒரு திக்கற்ற ஏழைக்கு வழங்காமல் இருந்தென்ன, இறந்தென்ன பயன். செல்வந்தனுக்கு பணம் இருக்கு அறிவு இருக்கு. ஏழைக்கு இது இரண்டும் கிடையா. அவர்களுக்குக் கல்வி மகத்துவம் தெரியாது. அதனைச் சொல்லிக் கொடுப்பாரும் இல்லை. இது சமுதாய மக்களிடையே உள்ள குறைபாடு. இதை ஒருசிலர் கன்மம், விதி என்று தள்ளிவிடுகிறார்கள்; அலட்டிக்கொள்வதில்லை இது உண்மையில் அறியாமையே எல்லா கன்மம் விதி என்றால் மனித முயற்சிக்கு என்ன சொல்வது? ஒரு செயலைப் பார்த்து இது நல்லது இது கெட்டது என்று கூறுகிறோம் எல்லாம் கன்மம் விதி என்றால் ஒரு செயலின் நன்மையையும் தீமையையும் அதைச் செய்தவர் பால் சுமத்துவது பொருந்தாத ஒன்று ஆகும். உண்மையை நோக்கினால் சிந்தித்தல் கன்மமும் உண்டு முயற்சியும் உண்டு. இந்தக் கருத்தை "நாலடியார்" என்ற நூலில் வரும் பாடல் ஒன்றின்மூலம் நாங்கள் புரிந்துகொள்ளலாம் கன்மமானது.

"சிறுகா பெருகா முறை பிறழ்ந்து வாரா
உறு காலத்து ஊற்றாக ஆம் இடத்தே
ஆகும்"

அதாவது கன்மமானது குறைந்துப் வராது. வரவேண்டிய காலத்தில் வரும். ஆகவே மனித முயற்சியையும் அதன் பலனையும் மறுப்பதற்கில்லை. இன்று பல நாடுகள் குறிப்பாக ஜப்பான் நாடு அடைந்துள்ள வளர்ச்சி அந்நாட்டு மக்களின் முயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஆகவே தனிமனித முயற்சி, சமுதாய முயற்சி இவைகள் மூலம் கல்விக் கூடங்களும் அறிவாலயங்களும் நூல் நிலையங்களும் ஊர்கள் தோறும், கிராமங்கள் தோறும் அமைக்கப்படவேண்டும் அறியாமை ஒழியவேண்டும். ஒரு ஊர் ஒரு நாடு ஒரு கிராமம் மக்களைக் கொண்டது. இதில் நூற்றுக்குப் பத்து அல்லது இருபது வீதம் தான் படித்தவர்கள் என்றால் அந்த நாட்டுக்குத்தான் அல்லது ஊருக்குத்தான் கிராமத்துக்குத்தான் என்ன பெருமை. இந்த நிலை ஒரு நாட்டுக்கு எவ்வளவு கெடுதியானது. அங்கு நீதி, நியாயம் கிடைக்குமா?

சில கோவில்களில் வெளியில் அமைந்திருக்கும் கிணறுகளில் இருக்கும் கிணற்று வாளியை எவராவது கழற்றிக்கொண்டு போகாமல் அந்த வாளியை சங்கிலியில் பிணைத்து தூண்களில் அறைந்துள்ளார்கள். கோவில்களில் பூசைமுடிந்ததும் கோவில்களைப் பூட்டிக்கொண்டுதான் போகவேண்டியுள்ளது. ஏனென்றால் நிகழ்வுகள் இதை வலியுறுத்துகின்றன. சைக்கிள்களைப் பொது இடங்களில் பூட்டாமல் விட்டுச் செல்லமுடியாது. இவைபோன்ற எத்தனையோ குறைபாடுகள் நம் சமுதாயத்தில் இருக்கின்றன. இவை எல்லாம் எதை எடுத்துக் காட்டுகின்றன. சமுதாய மக்களின் அறியாமையையே. இந்தக் கல்வியறிவின்மையைக் கண்ட பாவேந்தர் பாரதிதாசன் எங்களைப் போன்ற படித்தவர்கள், படிக்காதவர்களுக்கு கல்வி வழங்காமல் இருக்கும் நிலையைக்கண்டு,

"கல்லாரைக் காணுங்கால்
கல்வி நல்காக்
கசடர்க்கு தூக்குமரம்
அங்கே உண்டாம்" என்றும்

நாடு முழுவதும் கல்வி நிறைந்திருக்க வேண்டுமென்று

"என்னரும் தமிழ்நாட்டின் கண்
எல்லாரும் கல்வி கற்று
உன்னத இமயமலை போல்"
என்றும் கூறுகிறார்.

இன்று நாட்டில் விஞ்ஞானத் தொழில்நுட்பக் கல்விகள் போதிக்கப்படுகின்றன. இதனால் நாட்டில் தொழினுட்பம் விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனால் இதன் பக்கவிளைவு லௌகீகத்திற்கு முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியுடன் சுயநலம் ஆனது பதவிமோகம் இவை எல்லாம் கூடவே வளர்ந்து மனுஷிகம் செல்லாக் காசாகிவிட்டது. தாய்-தந்தைபாசம், அண்ணன் — தம்பி உறவு, இனம், சுற்றம், நண்பன், அயலவன் என்ற உறவுகள் எல்லாம் வீண் பேச்சாகப் போச்சு. இங்கு அன்பு என்றால் "அது என்ன" எனக் கேட்கிற நிலையில் நாம் வாழ்கின்றோம். சைவத்தின் அடிப்படை அன்புதான் என்பதும் மாறிப்போய்விட்டது. இவை நமது சமுதாயத்தில் "வயோதிபம்" ஒரு பயங்கர வியாதியாக உருவெடுத்துள்ளது. வயோதிபப் பெற்றோர்கள் ஆதரவற்ற நிலையில் வயோதிப இல்லங்களையும் ஆச்சிரமங்களையும் நாடவேண்டியுள்ளது. இன்று விஞ்ஞான தொழினுட்பம் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் உள்ள மக்களிடையே ஒரு பரிதாபகரமான நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் என்னதான் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் பொருளாதார வளர்ச்சி அடைந்திருந்தாலும் அவர்கள் மனதில் நிம்மதி இல்லை. குடும்பங்களில் அமைதி இல்லை. ஏதோ ஒன்றை இழந்தவர்கள்போல அலைகிறார்கள். தங்கள் பரிதாபகரமான நிலையைப் போக்க இந்தியா போன்ற நாடுகளுக்கு விழுந்தடித்து வருகிறார்கள். ரிஷிகள் ஞானிகளைத் தேடி அமைதிவேண்டி நிற்கிறார்கள்.

நவீன கல்வி முறையுடன் ஆன்மீகக் கல்வியும் போதிக்கப்படவேண்டும். தத்துவம் ஒரு கட்டாய பாடமாகவேண்டும். மனிதன் வெறும் பொருளாக வெறும் யந்திரமாக மட்டும் வாழக்கூடாது. சிந்திக்கும் மனிதனாகவும் வாழவேண்டும். இதையே மகாயோகி ஸ்ரீ அரவிந்தர் தமது தேசியக் கல்விமுறையில் கூறுகிறார். அவரின் கூற்றுப்படி கல்வியானது இந்துமத உளவியல் அடிப்படையில் அமையவேண்டும். இந்துமத உளவியல் தத்துவத்தில் மனம் புத்தி சித்தம் அகங்காரம் முக்கியஇடம் பெறுகிறது. இவைகளை விளங்கி இவற்றின் செயற்பாட்டை அறிந்து இவற்றின் அடிப்படையில் சில யோகப்பயிற்சி முறைகளையும் மாணவருக்குப் பயிற்றுவித்துக் கல்வி ஊட்டப்படவேண்டுமென்பது அரவிந்தரின் கூற்று. இவ்வாறே சுவாமி விவேகானந்தரும் இந்துமத அடிப்படையில் கல்வி ஊட்டப்பட வேண்டு

மென்கிறார். அவரின் கூற்றுப்படி மனித னுக்குள் புதைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி என்கிறார். அவர் மேலும் கூறுகிறார். "அறிவு மனிதனிடத்தே இயல்பாயமைந்துள்ளது அது புறத்தே இருந்து வருவதொன்றன்று உலகம் இது காலவரையும் பெற்ற அறிவு முழுவதும் மனத்திலிருந்து வந்தது. சராசரத்திலுள்ள அறிவு அனைத்தும் பொதிந்துள்ள எல்லையற்ற நூற்களஞ்சியம் நம் உள்ளத்தே இருக்கின்றது. ஆகவே நாம் கற்கவேண்டியது எமது மனத்தையே. புறப்பொருள்கள் இதற்கு ஒரு கருவி அல்லது தூண்டுகோலே. எல்லா விதமான சக்திகள், இயற்கை இரகசியங்கள் ஆற்றல் அறிவுகள் இவை எல்லாம் நம் மனத்துள்ளே இருக்கின்றன. அனந்த காலமாக எம்மனதில் புதைந்திருக்கும் அறிவைவெளிப் படுத்துவதே கல்வியாகும்" என்று கூறுகிறார் அரவிந்தர், பிளேற்றோ என்ற கிரேக்க தத்துவ ஞானியும் இந்த கோட்பாட்டைக் கொண்டிருந்தார். அவர் ஒரு கல்வியறிவற்ற அடிமைச் சிறுவனிடம் கேள்விக்குமேல் கேள்வி கேட்கிறார். அவருடைய கேள்விகள் அவனுடைய மனத்திலிருந்து அவனாகவே பதில் சொல்லக்கூடிய மாதிரி அமைந்திருந் தன. அந்தச் சிறுவன் அவருடைய கேள்வி களுக்குச் சரியானவிடைகள் அளிக்கின்றான். இவை எல்லாம் என்னத்தைக் காட்டுகின் றன மனம் ஒரு அறிவுக்களஞ்சியம் என்ற இந்தத் தத்துவக் கோட்பாட்டையே.

ஆகவே எங்கும் அறிவு ஒளி வீசட்டும், அறிவு வளரும், அறிவு மலரும். அன்பு மலர்ந் தால் சமுதாயம் மலரும். மகாயோகி அர விந்தர், மகாகவி தாகூர் போன்றோர் கூறிய "தெய்வீக வாழ்வு" (Divine life on Earth) நாட்டிலே மலரும். இந்த உலகத்திலேயே நாம் இதைக் காணலாம்.

**வ. கு. கணபதிப்பிள்ளை**
*பிரபல சட்டத்தரணி*

□ □ □

*"தன்னலமற்ற அன்பு எவரிடத்து அமையுமோ*
*அவரையே உலகம் வேண்டி நிற்கிறது"*

# எமது பாடசாலைக்காக வாழ்ந்த அதிபர்கள்

புற்றளைச் சனசமூக நிலையம் இன்றுள்ள இடத்திற்கண்மையில் உள்ள அரசமரத்துக் கயலில் 1916ஆம் ஆண்டு கொட்டிலாக எம் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது ஆழ்வார் கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அப்பொழுது புலோலி புற்றளை சாரதா பீட சைவ வித்தியா சாலை என்னும் நாமம் கொண்டிருக்க வேண்டும். 26 மாணவர்கள் வரை கல்வி கற்றனர். மேலும் பள்ளிக்கூட தாபகர்களுள் விநாயகர் என்று அழைக்கப்பட்ட வல்லியப்பர் வினாசித்தம்பியும் குறிப்பிடத் தக்கவர்.

1918ஆம் ஆண்டிலிருந்து மகாவித்தியாலயம் இன்றுள்ள இடத்தில் இயங்கிய பொழுது திருவாளர்கள் கணபதியார் கார்த்திகேசு, பண்டிதர் முருகேசு ஆகியோர் சேவையாற்றியுள்ளனர்.

1924ஆம் ஆண்டு இடைப்பகுதியிலிருந்து 1926ஆம் ஆண்டு இடைப்பகுதி வரை கற்கோவளத்தைச் சேர்ந்த அருணாசலம் என்பவர் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் சேவைக் காலம் இரண்டு வருடங்களாகும்.

1926ஆம் ஆண்டிலிருந்து துன்னாலை வடக்கைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை ஏறக்குறைய மூன்று வருடங்கள் தலைமை ஆசிரியராக கடமையாற்றினார் எனக் கொள்ளக் கிடக்கின்றது உடன் ஆசிரியர்களாகக் கடமை புரிந்தவர்கள் கார்த்திகேசு உபாத்தியாயர் என அழைக்கப்பட்ட கணபதிப்பிள்ளை முருகேசு, கந்தப்பர் முருகேசு (கந்த முருகேசனார்) ஆகியோர். கந்தமுருகேசனார் 1933 வரை பாடசாலையில் கடமை புரிந்தார். பாடசாலை தொடங்கும்போது சைவ வினா விடை படித்து, தேவாரத்தோடு தொடங்குவர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பனை ஓலையில் எழுத்தாணியால் தேவாரம் எழுதிப் பாடமாக்கினர். 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்றார்கள் எனத் தெரிகிறது. அவர்கள் கற்கோவளம், வராத்துப்பளை, புலோலி கிழக்கு, அல்வாய், வரணியைச் சேர்ந்தவர்கள்.

பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், நிகண்டு, நன்னூல், நைடதம் கம்பராமாயணம், திருக்குறள் இவை கற்பிக்சப்பட்டன. புலோலியைச் சேர்ந்த கந்தப்பர் இராமசாமி என்பவரும் தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றினார்.

1929ஆம் ஆண்டளவில் துன்னாலையைச்சேர்ந்த கந்தப்பர் சிவப்பிரகாசம் என்பவர் தலைமை ஆசிரியராக இருந்தார், அவர் காலம் சீனி உபாத்தியார். கிருஷ்ணபிள்ளை பொன்னம்மா ஆகியோர் உதவி ஆசிரியர்களாக இருந்தனர்

கந்தப்பர் சிவப்பிரகாசம், சித்திவிநாயகர் பாடசாலைக்குச் செல்ல உதவி ஆசிரியராகப் பணி புரிந்து வந்த தும்பளையைச் சேர்ந்த வே. சிதம்பரப்பிள்ளை (சீனி உபாத்தியாயர்) தலைமை ஆசிரியரானார். இவர் 1930ஆம் ஆண்டளவில் புற்றளையை விட்டு சித்திவிநாயகர் வித்தியாலயத்திற்கு தலைமை ஆசிரியராகச் சென்றார்.

கந்தப்பர் சிவப்பிரகாசம் இரண்டாவது தடவையாக தலைமை ஆசிரியராகத் தம் பழைய பாடசாலைக்கு மீண்டார். இவர் 1937-ம் ஆண்டு வரை அதிபாரக இருந்தார். இவருக்கு உறுதுணையாக இருந்தவர் க. தம்பையா அவர்கள்.

1934—ல் இப்பாடசாலை கனிட்ட இரண்டாம் நிலைப் பாடசாலையாகக்

கணிக்கப்பட்டது. 1937இல் சிரேட்ட இரண்டாம் நிலைப்பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டது. சிரேட்ட கல்விப் பொதுத்தராதர வகுப்புகளு ் ஆரம்பிக்கப்பட்டன சிரேட்ட வகுப்பில் 15 பிள்ளைகளும் பாடசாலையில் 300 பிள்ளைகளும் கல்வி பயின்றார்கள். கந்தப்பர் சிவப்பிரகாசம், க. தம்பையா இவ்விருவினதும் பெருமுயற்சியின் விளைவாக சிரேட்ட கல்விப் பொதுத்தராதர வகுப்புகளில் பெரும்பாலோர் சித்தியடைந்தனர். அதனால் மேலும் அயற்கிராமங்கள் தும்பளை, அல்வாய், வரணி, வராத்துப்பளை மாணவர்களும் இப்பாடசாலைக்கு ஆர்வத்துடன் வந்து சேர்ந்தனர்.

1937ஆம் ஆண்டில் தம்பையா சிதம்பரப்பிள்ளை தலைமை ஆசிரியரானார் 1.6 68 வரை கடமையாற்றினார். 1938ஆம் ஆண்டளவில் வராத்துப்பளை கலவன் பாடசாலையென எம் பாடசாலை அழைக்கப்பட்டது.

29.8 63இல் வராத்துப்பளை தமிழ் கலவன் ாடசாலை என்று அழைக்கப்பட்ட எம் பாடசாலை அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது. 01 07.1965இல் எமது பாடசாலை புற்றளை வித்தியாலயம் எனப் பெயர் பெற்றது.

1968 ஆம் ஆண்டில் எம்வித்தியாலயம் ஒருமகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது. இதன் முதலாவது அதிபராக திரு. ந. நடராசா அவர்களை முன்னாள் கல்வி அதிபதி திரு. சி. தணிகாசலம் அவர்கள் தேர்ந்தெடுத்து நியமித்தார். இவர் காலப்பகுதியில் பொதுத் தராதரக்கல்வி சாதாரண தர வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. நிர்வாகத்திறமை கொண்டவரும் பாடசாலையில் கட்டுப்பாட்டைப் பேணியவருமாக இவர் பலராலும் போற்றப்படுகிறார்.

1970-ல் விஞ்ஞான வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன, 13-12 1970இல் திரு, ந. நடராசா இளைப்பாறினார்.

01-01-1971-ல் திரு சி. தருமலிங்கம் இம்மகாவித்தியாலயத்துக்கு அதிபரானார். 17 வருடங்கள் தொடர்ந்து சேவையாற்றினார். இவருடையகாலத்தில் இவருடைய சிறிய நந்தையர் பே சின்னத்தம்பி அவர்கள் 100' × 20' கட்டடம் ஒன்றைக் கட்டி வித்தியாலயத்துக்கு அன்பளிப்புச் செய்தார். மாணவர் தேவையை அனுசரித்து புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன. உயர்தர விஞ்ஞான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட வழி அமைக்கப்பட்டது. இச்செயல்கள் அவரின் தீர்க்க தரிசனத்தையும் சேவை மனப்பான்மையையும் காட்டுவதாக அமைகின்றன. இவர் 25-12-1987இல் ஓய்வு பெற்றார்.

26-12-1987இல் என்னிடம் அதிபர் பதவி ஒப்படைக்கப்பட்டது.

எ. ஜோஷுவ
அதிபர்

□ □ □

" ஆற்றல்கள் நிறைந்த அறிவாளிகளை;
மனிதத்துவம் நிறைந்த மனிதர்களாக
உருவாக்குவதே சிறந்த கல்வி"

# எங்கள் ஆசிரியர் குழாம் 1990 — 1991

**அதிபர்**

திரு. எ ஜோஷுவ, B.A., Dip. in. Ed., M.A.

**உப அதிபர்**

திரு. தா. ஜெயவீரசிங்கம், B. A.

**பிரிவுத் தலைவர்கள்**

திரு. தா. ஜெயவீரசிங்கம் B. A.
திருமதி இ. சண்முகநாதன் Trd. I

**பாட மேற்பார்வையாளர்**

தமிழ்
சமயம் } திரு. தா. ஜெயவீரசிங்கம்

கணிதம் : திரு. வே. திருஞானசம்பந்தர் Sp. Trd. Maths.
விஞ்ஞானம் : திருமதி தி. சுவேந்திரராசா Sp. Trd. Sci.
சமூகக்கல்வி : திரு. ச. ச. சண்முகநாதன் B. A. Hons.
ஆங்கிலம் : திரு. க. நித்தியானந்தம் Sp. Trd. Eng.
செல்வி வ. துரைச்சாமி B. A.
செல்வி பே. கமலாம்பாள் B. A. Trd.
திருமதி ஈ. லக்ஸ்மணன் Sp. Trd. Home Science
திருமதி க நவரட்ணம் Sp Trd. English
திரு தி சி சோமசுந்தரம் Sp. Trd. Physical Ed.
திருமதி பொ. சிவசுப்பிரமணியம் Trd. I
திரு. ஆ. மகேசு Trd. I
திருமதி ல. சதாசிவம் Trd.
திரு. மு. முரளிதரன் Sp. Trd. Music
திருமதி பா. உருத்திரா Dip. in. Book-keeping
திருமதி சு. சிவகுருநாதன் Sp. Trd. Agriculture
திரு. ம. மகேஸ்வரராசா Sp. Trd. Maths
செல்வி ச. ஆன் வினிதா G. C. E. (A/L)
செல்வி க. குகநாயகி G. C. E. (A/L)
செல்வி சி. தனலட்சுமி G. C. E. (O/L)
செல்வி ஆ. பிறிஜெற் ஜோர்ஜினி G. C. E. (A/L)

செல்வி க.புனிதவதி G. C. E. (A/L)
செல்வி செ. செல்வறஜனி G .C. E. (A/L)
திரு. இ. கணேஸ்வரன் G. C. E. (A/L)
திரு. க. கண்ணன் G. C. E.(A/L)
செல்வி அ. செல்லையா G. C. E. (A/L)

**இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள் 22–01–90 இருந்து 02–09–91 வரை**

திருமதி ச. சீவரத்தினம் B. A.
திருமதி ச. சிவானந்தன் Sp. Trd. Science
திரு. ஐ. நடராசா Sp Trd. Agriculture
திருமதி வ. வேலும்மயிலும் B. A.
திருமதி ர. முருகையா G. C. E. (A/L)
திருமதி யோ. மாணிக்கவாசகர் Trd.
திரு ச. பாலகிருஷ்ணன் Sp Trd. Science
செல்வி வ. றஞ்சனா G. A. Q.
திருமதி அ. இந்திராதேவி G. C. E. (A/L)

**சேவையிலிருந்து நீங்கியோர்**

செல்வி ச. சத்தியபாமா

**அலுவலக ஊழியர்**

திரு. சு. கந்தசாமி

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழு

தலைவர் : அதிபர்

செயலாளர் : வ. செல்வராசன்

பொருளாளர் : ச ச சண்முகநாதன்

தா. ஜெயவீரசிங்கம்

சு. தங்கநவமணிநாதன்

சி. சிவமயம்

எஸ். கே. மரியரத்தினம்

வே. சபாரத்தினம்

ஏ. இராஜேஸ்வரன்

செ. சிவகுருநாதன்

திருமதி இ. சண்முகநாதன்

கணக்காய்வாளர் : த. இராஜலிங்கம்

# பழைய மாணவர் மன்றம்
# புற்றளை மகா வித்தியாலயம்
## செயற் குழு

புரவலர் :
அதிபர்

தலைவர் :
திரு. க. கதிர்காமநாதன்

உதவி தலைவர்கள் :
திரு. அ. குமரேஸ்
திரு. வே. வீரபத்திரபிள்ளை
திரு. வீ. க. சண்முகநாதன்
திரு. ஆ நா. சு திருச்செல்வம்
திருமதி பொ சிவசுப்பிரமணியம

செயலாளர் :
திரு. வ. செல்வராசன்

பொருளாளர் :
திரு. ச. சண்முகநாதன்

உதவி செயலாளர் :
திரு. வீ. பாலகிருஷ்ணன்
திரு. வே. சுகுமார்

உதவிப் பொருாளர் :
திரு. சு. கந்தசாமி

செயற்குழு உறுப்பினர் :
திரு. சி. சிவமயம்
திரு. சு. நடராசா
திரு. செ. இராதாகிருஷ்ணன்
திரு. கி. குகநாதன

எண்பார்வையாளர் :
திரு நா. க. ஆறுமுகம்
திரு. எஸ். யே. மரியரட்ணம

# நன்றி (நவிலல்) உரை

புலோலியில் நல்லோர் பலரையும் வல்லோர் பலரையும் உருவாக்குவதற்கு அடித்தளமாக அமைந்த புற்றளை மகாவித்தியாலயம் இவ்வாண்டு தனது கன்னி விழாவாகப் பவள விழா கொண்டாடுவதையிட்டுப் புலோலி வாழ் மக்கள் பெரு மகிழ்வு எய்துகிறார்கள்.

இவ்விழாவினைச் சிறப்புறவும் இடையூறுகளின்றியும் நடாத்த துணை நின்று திருவருள்பாலிக்கும் புற்றளைச் சித்திவிநாயகனுக்கு முதற்கண் எமது நன்றி கலந்த வணக்கங்கள்.

எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கும் எமது அதிபரின் விடாமுயற்சியும், ஆசிரியர் மாணவரின் ஒத்துழைப்பும், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலம் விரும்பிகள் ஆகியோரின் இடைவிடாத தூண்டுதலும் துணையுமே இப்பவள விழாவாகப் பரிணமித்திருக்கிறது. இவர்களுடைய சேவையை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இவ்விழாவைச் சிறப்புற நடாத்துவதற்கு நெருக்கடி மிகுந்த காலகட்டத்திலும் தமது இயல்புக்கும் மேலாக பணம் வழங்கி உதவியவர்களுக்கும் எமது நன்றிகள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் வித்திடப்பட்ட மலருக்கு ஆசியுரை, கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியவற்றை வழங்கி மலரினை மணம் வீசச் செய்த பெரியார்கள், அறிஞர்கள் யாவரும் எமது நன்றிக்கு உரித்தானவர்கள்.

பாடசாலை வரலாறு சம்பந்தமான பழைய ஆவணங்களை மிகச் சிரமப்பட்டுத் தேடி செம்மைப்படுத்தித் தந்துதவிய வழக்கறிஞர் திரு. வ. கு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், பழைய ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோரைச் சந்தித்து பாடசாலை வரலாறு சம்பந்தமான பல உண்மைச் சம்பவங்களை சேர்த்துத் தொகுத்து உதவிய வழக்கறிஞர் திரு. இ. உருத்திரா அவர்கட்கும், முன்னாள் கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் அவர்கட்கும், மலருக்கு வேண்டிய ஆக்கமும் ஆலோசனையும் உதவியும் வழங்கிய எமது பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. செல்லத்துரை அவர்கட்கும் எமது நன்றி கலந்த பாராட்டுக்கள்.

தமது கலை நிகழ்ச்சிகளினால் விழாவினைக் களைகட்டச் செய்த ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் ஏனையோர்க்கும் எமது நன்றிகள்.

மலரைக் குறிப்பிட்ட நேரத்திலும் குறைந்த செலவிலும் அழகாகவும் அச்சிட்டுத்தந்த யாழ் புனித வளனார் கத். அச்சகத்தாருக்கும், மிகச் சிறந்த முறையில் பாடசாலை வளர்ச்சிப் படியின் மூன்று கால கட்டங்களையும் வரைபடத்தில் வரைந்துதவிய ஓவியர் திரு. கணேசமூர்த்தி ஆசிரியர் அவர்கட்கும் எமது நன்றிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக விழாவிற்கு சமுகம் தந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றிகள் என்றென்றும் உரித்தாகுக.

மலர் அமைப்புக் குழு

## மலர் அமைப்புக் குழு

*தலைவர் :*

திரு. எ. ஜோஷுவ

*உறுப்பினர் :*

திரு த. கதிர்காமநாதன்

திரு. தா. ஜெயவீரசிங்கம்

திரு. வே. வீரபத்திரபிள்ளை

திருமதி இ. சண்முகநாதன்

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் — 1992